பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 6.00

# வலம்புரி

VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 15 சனிக்கிழமை (29.03.2003) தொலைபேசி- 2223378 ஒலி 100

தரமான மூக்கு கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும், சிறந்த முறையில் பற்களைக் கட்டிக் கொள்ளவும், மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ளவும் நாடவேண்டிய இடம்



பீ.ஜே.பர்னான்டோ

இல.542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

# சீனப் படகு விவகாரம்

# புலிகள் தாக்கியதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை

## விசாரணை அறிக்கையில் கண்காணிப்புக்குழு தகவல்

(நமது நிருபர்)

**முல்லைத்தீவு சுண்டிக் குளம் கடற்பரப்பில் சீன மீன் பிடி இழுவைப் படகுகளை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் கிடைக்காத நிலையில் எதனையும் உறுதியாகக் கூறமுடியாதிருப்பதாக இச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.**

முல்லைத்தீவு சுண்டிக்குளம் கடற்பகுதியில் கடந்த இருபதாம் திகதி வியாழக்கிழமை இரவு மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த இரண்டு சீன மீன்பிடி இழுவைப் படகுகள் இனம் தெரியாதோரினால் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பக்கச் சார்பற்ற விசாரணைகளை நடத்திய யுத்த நிறுத்தக் கண்காணிப் புக் குழு தனது அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் இந்த அறிக்கை நேற்று அரசாங கத்திடமும் விடுதலைப் புலிகளிடமும்

(10ம் பக்கம் பார்க்க)

## யப்பான் பேச்சுக்களில் கலந்து கொண்ட

# விடுதலைப் புலிகள் குழுவினர் தாயகம் திரும்பியுள்ளனர்

(கிளிநொச்சி)

யப்பானில் இடம் பெற்ற பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட தமிழழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமையிலான குழுவினர் நேற்று தாயகம் திரும்பியுள்ளனர்.

நேற்று நள்ளிரவு டோக்கியோ விமான நிலையத்தில் இருந்து புறப் பட்ட குழுவினர் அதிகாலை கட்டு நாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்து,அங்கிருந்து விஷேட ஹெலிகொப்டரில் கிளிநொச்சியை காலை 9.30மணிக்கு வந்தடைந்த னர்.

வன்னி திரும்பிய தமிழ்ச்செல்வன் நேற்றுப் பிற்பகல் விடுதலைப் புலி களின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இதேவேளை,யப்பான் பேச்சுக் களில் கலந்து கொண்ட புலிகளின் கிழக்கு மாகாண சிறப்புத் தளபதி கருணா அம்மான் கட்டுநாயக்காவில இருந்து நேரடியாக விஷேட ஹெலி மூலம் மட்டக்களப்பை வந்தடைந் தார். (இ)

# அமெரிக்காவுக்கு எதிராக ஜே.வி.பி.ஆர்ப்பாட்டம்

## பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம்

(கொழும்பு)

அமெரிக்க-பிரிட்டிஷ் கூட்டுப் படைகள் கடந்த 10 தினங்களுக்கு மேலாக நடத்தி வரும் கண்மூடித் தனமான தாக்குதல்களைக் கண்டித்து ஜே.வி.பி. நேற்று கொழும்பில் நடத்திய கண்டன ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை பொலிஸார் இடை மறித்து முட் கம்பி வேலி போட்டு கண்ணீர்ப் புகை பிரயோகம் செய்து கலைத்தனர்.

கொழும்பு மாளிகாவத்தை றூபி பட மாளிகையில் இருந்து அமெரிக்க பிரிட்டிஷ் எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பிய வண்ணம் அமெரிக்க தூதரகத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த போதே பொலிஸார் ஊர்வலததை விகாரமாதேவி பூங்காவில் வைத்து தடுத்து நிறுத்தினார்கள்.

பொலிஸார் தடுத்ததையும் பொருட்படுத்தாது ஊர்வலத்தை முன்னெடுத்துச் செல்ல முற்பட்ட போது கண்ணீர்ப் பிரயோகம்,குண்டாந்தடிப் பிரயோகம் செயது ஊர்வலத்தில் சென்றோரைக் கலைத்தனர்.இதனைத் தொடர்ந்து கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம்,பிரிட்டிஷ் தூதரகம் ஆகியவற்றிற்கான பாதுகாப்பை பொலிஸார் பலப்படுத்தியுள்ளனர். (வ)

## சமஷ்டி பற்றி ஆராய்வதற்கு புலிகள் குழு ஐரோப்பா பயணம்

(கிளிநொச்சி)

சமஷ்டி அரசியல் தீர்வு குறித்து ஆராயும் விடுதலைப்புலிகளின் அரசியல் குழுவினர் 16 பேர் இன்று ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டு கட்டுநாயக்காவிலிருந்து புறப்படுகின்றனர்.

இக்குழுவினர் நோர்வே, பின்லாந்து, சுவீடன், டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்து அந் நாடுகளின் சமஷ்டி முறை குறித்து ஆராயவுள்ளனர்.

அடுத்தமாதம் 12ம் திகதி வரை இக்குழுவினர் வெளிநாடுகளில் தங்கியிருந்து சமஷ்டி அரசியல் முறை குறித்து ஆராய்வர்.

அதேவேளை ஐரோப்பா செல்லும் இக்குழுவினரில் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவனும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## இலங்கைக்கு உதவி வழங்கும் டோக்கியோ மாநாட்டிற்கு ஐரோ.யூனியன் தலைமை

(கொழும்பு)

யூன் மாதம் டோக்கியோவில் நடை பெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு தலைமை தாங்குவதற்கு ஐரோப்பிய யூனியன் முன்வந்துள்ளதெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்கு நிதியுதவி வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 15 நாடுகளும் முன்வந்திருப்பதையடுத்தே,இம் முடிவினை ஐரோப்பிய யூனியன் எடுத்திருப்பதாக அரசாங்கத்தின் முக்கிய பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

டோக்கியோவில் நடை பெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும்

(10ம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித் தேர்தலுக்கு புலிகள் சம்மதம் தெரிவிப்பு

### சமாதான முயற்சிக்கு உந்து சக்தி- பீரிஸ்

(கொழும்பு)

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஜனநாயக முறைப்படி நடத்துவது தொடர்பாக தாம் பரிசீலிக்கத் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்திருப்பது சமாதானப் பேச்சுவார்த்தை முன்னேற்றத்திற்கு உந்து சக்தியாக உள்ளதென அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

யப்பானில் நடை பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தையை முடித்துக்

(10ம் பக்கம் பார்க்க)

## க.பொ.த.(சா/த) முடிவு அடுத்த வாரம்

(கொழும்பு)

க.பொ.த சாதாரணதர பரீட்சைப் பெறுபேறுகள் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில்,பாடசாலை விடுமுறைக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படுமென்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஒவ்வொரு பாடசாலையும் அனுப்ப வேண்டிய கணிப்பீட்டுத் திட்டம் பற்றிய அறிக்கைகள் தொடர்பாக சிறுதாமதம் ஏற்பட்டிருக்கின்றது.

(10ம் பக்கம் பார்க்க)

## நிரூபம் சென்-பதியுதீன் நேற்று சந்திப்பு

(புத்தளம்)

இலங்கை மீனவர்கள் இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்படுவது தொடர்பாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இசாத் பதியுதீன் இந்தியத் தூதுவர் நிரூபம் சென்னை நேற்றுச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கடந்த வாரம் தலைமன்னார் கடற்பரப்பில் இந்திய கடற்படையினரால் இலங்கை மீனவர்கள் 6பேர் கைது செய்யப்பட்டு இராமேஸ்வரம் சிறை

(10ம் பக்கம் பார்க்க)

### ஊறுகொடவத்தை சம்பவம்

## மூன்று பொலிஸாருக்கு நேற்று இடமாற்றம்

(கொழும்பு)

கொழும்பு கிராண்பாஸ் ஊறுகொடவத்தையில் சிறுமி ஒருவர் வீட்டில் பூட்டி வைக்கப்பட்டிருந்த சம்பவத்துடன் தொடர்புள்ளதாகத் சந்தேகிக்கப்பட்ட மூன்று பொலிஸார்கள் நேற்று இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன்,சம்பந்தப்பட்ட பொலிஸார் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ்மா அதிபர் ரி.இ.ஆனந்தராசா தெரிவித்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,கொழும்பு கிரண்டபாஸ் ஊறுகொடவத்தையில் உள்ள வீடு ஒன்றில் சிறுமி ஒருவர் பூட்டி வைக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து அவ்வீட்டில் இருந்து புதைத்து வைக்கப்பட்டிருந்த சிறுமிகளின் உடைகள் எடுக்கப் பட்டுள்ளதாகவும்,

(10ம் பக்கம் பார்க்க)



ஊறுகொடவத்தைச் சம்பவத்தைக் கண்டித்து பொது மக்கள் நேற்று நடத்திய ஆர்ப்பாட்டம்..

# ஐக்கியமும் சமாதானமுமே சினியாத்ராவின் நோக்கம்

(யாழ்ப்பாணம்)

வியாபார நோக்கத்துக்காக நாம் தென்னிலங்கையிலிருந்து படங்களை இங்கு கொண்டு வரவில்லை கலைஞர்கள் மத்தியில் ஐக்கியமும் மக்கள் மத்தியில நிரந்த சமாதானமும் உருவாக வேண்டும் என்பதே எமது நோக்கம்.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம் பெற்ற சினியாத்ராவில் உரையாற்றும்போது சினியாத்ரா இயக்குநர்- பிரசன்ன விதானகே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு பேசுகையில்சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின் தென்னிலங்கையில் இருந்து வியாபார நோக்கத்துக்காக எம்மவர்கள் படை எடுத்து வருகின்றனர், அவர்கள் பலதரப்பட்ட பொருட்களை எடுத்துவருகின்றனர் அத்துடன் வீதி சுவர்களில் விளம்பரங்கள் ஒட்டுகின்றனா. நாம் வடபகுதிக்கு அபபடியான ஒன்றை கொண்டு வரவில்லை. கலைஞர்கள் மத்தியில் ஐக்கியத்தை வளர்க்கவும் நிரந்தர சமாதானத்தை கட்டியெழுப்பவும் தான் நாம் இதை கொண்டுவந்துள்ளோம்.

திரைப்படங்கள் வட-கிழக்கில் வெளியிடப்படுகின்றனஆனால் அவைகளை தெற்கு மக்கள் பார்ப்பதற்கு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. இத் திரைப் படங்களை நாம் தென்னிலங்கை மக்களுக்கு கொண்டு சென்று காட்டவேண்டும் அதேபோல் வட-கிழக்குமக்களுக்குதென் இலங்கை கப் படங்களை காண்பிக்க வேண்டும் அப்போது தான் நல்லுறவை வளர்க்க முடியும் தற்போது நாம் தயாரிக்கும் படங்கள் வடகிழக்கை மையமாக வைத்துத்தான் எடுக்கப்படுகின்றன என்றார்.

இந்த நிகழ்வில் யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் மோகனதாஸ், முன்னாள்துணைவேந்தர் பாலசுந்தரம் பிள்ளை பேராசிரியர் சிவச்சந்திரன், பேராசிரியர் சண்முகதாஸ்,பேராயர் ஜெபநேசன் நித்சனம்ஞானேந்திரன மற் றும் பலர் கலந்து கொண்டனர். (பி-7)

## சாதனை நிலை நாட்டுவோம் அடுத்த கிண்ணமும் எமக்கே

### ஆஸி. அணித் தலைவா வீரப்பிரதாபம்

(அவுஸ்ரேலியா)

2007ஆம் ஆண்டு நடை பெறவுள்ள உலகக் கிண்ணச் சுற்றுப்போட்டியிலும் கிண்ணத்தை கைப்பற்றுவதின்மூலம் தொடர்ச்சியாக மூன்று தடவைகள் உலகக் கிண்ணத்தை கைப்பற்றிய அணி எனும் பெருமையைத்தட்டிச் செல்வோம் என உலகக்கிண்ண நடப்புச் சம்பியனான அவுஸ்திரேலிய அணியின் றிக்கி பொண்டிங் செய்தியாளர்கள் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், தொடர்ச்சியாக இருதடவைகள் உலகக்கிண்ணத்தை வென்ற அணியாகத் திகழ்ந்த மேற்கிந்தியத்தீவுகள் அணியின் சாதனையை தற்போது நாம் சமப்படுத்தியுள்ளோம். நிச்சயமாக அதனை முறியடித்து புதிய சாதனை படைப்போம் என்றார்

தொடர்ச்சியாக 11 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் எமது அணி வெற்றி பெற்றிருந்த சமயத்தில் துரதிஷடவசமாக சுழல் பந்து வீச்சாளர்கள் ஷோன் வோர்னை இழக்கநேர்ந்தது ஆயினும் எமது வீர்கள் மனம் சோராமல் உலகக் கிண்ணத்தை கைப்பற்றியுள்ளனர்

ஆரம்பமாகவுள்ள மேற்கிந்திய தீவுச் சுற்றுப்போடடியிலும் தொடரை கைப்பற்றி 9வது உலகக்கிண்ணத்தையும் கைப்ற்றி அவுஸ்திரேலிய அணி புதிய சாதனையை படைக்கும் என நம்புவதாக அவுஸ்திரேலிய அணி புதிய சாதனையை படைக்கும் என நம்புவதாக அவுஸ்திரேலிய அணித்தலைவர் றிக்கி பொண்டிங் மேலும் தெரிவித்துள்ளார்.

இதே வேளை, அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணிஇதுவரை 3 உலகக் கிண்ணப் போட்டிகளில் வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது. (உ-55)

### நியு சிலாந்து வீரர் ஷேன் ஓ' கோனர் ஓய்வு

(டனிடின்)

நியூசிலாந்து வீர் ஷேன் ஒ'கோணர் சர்வதேசக் கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக கடந்த வியாழக்கிழமை அறிவித்துள்ளார்.

காலில் ஏற்பட்ட காயத்தினால் கடந்த உலகக்கிண்ணச்சுற்றுப் போட்டியில் பங்கேற்கவில்லை. இவர் 19 ரெஸ்ட் போட்டிகளில் விளையாடி 53 இலக்குகளை கைப்பற்றியுள்ளார் 38 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடி 46 இலக்குகளை சரித்துள்ளார்.

அவர் தனது ஓய்வுபற்றிக் கூறுகையில், இன்னும் ஓராண்டுகாலம் விளையாடுவதற்கு ஆர்வம் இருக்கிறது. ஆனால் வியாபாரதில் ஈடுபடதற்போதுவாய்ப்பு கிடைத்துள்ளது. அதுவே எனது எதிர்காலவாழ்க்கையாக இருக்கும்என தெரிவித்துள்ளார். (உ-55)

### இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தேசிய கலவி நிறுவனத்தால் நடத்தப்படும் பட்டப்படிப்பு கல்வி டிப்ளோமா மாணவர்களுக்கான பகுதி II இறுதித்தேர்வு இன்றும் நாளையும் யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ-4)

### தீ விபத்தில் ஒருவர் பலி

(கண்டி)

கண்டி பத்தேகம வெல்கந்த பிரதேசத்தல் உள்ள மத்தாப்பு தொழிற்சாலை ஒன்றில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்து காரணமாக அத்தொழிற்சாலையில் பணிபுரிந்த ஊழியர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்து காரணமாக அருகில் உள்ள வீடுகளுக்கும் தீ பரவியது.

மின் ஒழுக்கு காரணமாகவே இத் தீவிபத்து ஏற்பட்டது என சந்தேககிக்கப்படுவதாக பொலிஸ் அத்தியட்சகர் உடுகம்பொல தெரிவித்துள்ளார். (உ-8)

### ஹர்த்தால்

(மட்டக்களப்பு)

வளை குடாப்போருக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் கிழக்கு மாகாணத்தில் பல பிரதேசங்களில் நேற்றுக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

சம்மாந்துறை கல்முனை போன்ற பிரதேசங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-8)


## எக்ஸ்போ ஏவியேஷன்

இல.464, காலி வீதி,
கொழும்பு-3
தொ.பே: 074 512666
தொ.ந: 074 514700

இல.1E, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3891, 071 34 8888, 071 34 9999
தொ.ந: 021 222 3891

இல.296 A/1 காலி வீதி,
கொழும்பு-6.
தொ.பே: 01 360290, 01 360291

பயணிகளின் நலன் கருதி எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 1ம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் புதிய நேர அட்டவணை பின்வருமாறு:

காலை நேர விமானசேவை - EXV 712

| விபரணம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| புறப்படல் இரத்மலானை | 06.30 | 06.30 | 06.30 | ஓய்வு | 10.45 | 08.15 | - |
| வருகை பலாலி | 07.30 | 07.30 | 07.30 | | 11.45 | 09.15 | - |
| புறப்படல் பலாலி | 08.15 | 08.15 | 08.15 | | 12.30 | 10.00 | - |
| சென்றடைதல் இரத்மலானை | 09.15 | 09.15 | 09.15 | | 13.30 | 11.00 | - |

மாலை நேர விமானசேவை - EXV 714

| விபரணம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| புறப்படல் இரத்மலானை | - | 12.45 | - | ஓய்வு | 16.00 | 16.00 | 14.00 |
| வருகை பலாலி | - | 13.45 | - | | 17.00 | 17.00 | 15.00 |
| புறப்படல் பலாலி | - | 14.30 | - | | 17.45 | 17.45 | 15.45 |
| சென்றடைதல் இரத்மலானை | - | 15.30 | - | | 18.45 | 18.45 | 16.45 |

*இலவச போக்குவரத்து
யாழ்-பலாலி-யாழ்
கொட்டாஞ்சேனை- இரத்மலானை- கொட்டாஞ்சேனை
*வெளிநாட்டுப் பிரஜைகளுக்கும், உள்நாட்டுப் பிரஜைகளுக்கும் ஒரே விதமான பயணக்கட்டணங்களே அறவிடப்படுகின்றது. ஒரு வழி - 2425/=, இருவழி - 4550/=

குறிப்பு:- மேற்கூறப்பட்ட புதிய நேர அட்டவணைக்கேற்ப பயணிகள் தங்கள் பதிவுகளை மீளுறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(C/5886)


## இளைஞர் படையணி நேர்முகத்தேர்வுக்குழுவில் படை அதிகாரியும்

(யாழ்ப்பாணம்)

இளைஞர் படையணிக்கான ஆள் சேர்ப்பு நேர்முகத் தேர்வு யாழ் குடாநாட்டில் நேற்று ஆரம்பமானது

நேற்று யாழ் மேலதிக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இடம் பெற்ற வட்டுக் கோட்டைப்பிரதேசத்திற்கான இவ் ஆள் சேர்ப்புநேர்முகத் தேர்வுக்கு பெண்கள் உள்ளிட்ட சுமார் 60பேர் சமுகமளித்திருந்தனர்

இதேவேளை,இந் நேர்முகத் தேர்வுக் குழுவில் படை அதிகாரி ஒருவரும் இடம் பெற்றிருந்தமை இளைஞர் மத்தியில் பல்வேறு சந்தேகங் களை தோற்றுவித்திருப்பதாக கூறப்படுகிறது.

மேற்படி இளைஞர் படை அணிக்கான ஆள் சேர்ப்புக் குறித்து தென் பகுதி அரசியல் வாதிகள்பலரும் கண்டனக் குரல்களை வெளிப்படுத்தி இருந்ததுடன் இளைஞர் படையணிக்கு ஆட்சேர்ப்பா? குண்டர் படைக்கு ஆட்சேர்ப்பா என வினாக்கள் எழுப்பி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

## குக் நீரிணையைக் கடந்து இந்திய நீச்சல் வீராங்கனை புலா சௌத்ரி புதிய சாதனை

(புதுடில்லி)

நியூசிலாந்தின் தெற்குத்தீவிலுள்ள குக் நீரிணையை 32 வயது நிரம்பிய இந்திய நீச்சல் வீராங்கனை புலா சௌத்ரி 9 மணி 4 நிமிடங்களில் கடந்து மகளிருக்கான புதிய ஆசிய சாதனையை கடந்த செவ்வாய்க் கிழமை நிகழ்த்தியுள்ளார்.

கடும் குளிர்,கடல் கொந்தளிப்பு ஆகியவற்றை பொருட்படுத்தாது இச் சாதனையை இவர் நிகழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு மட்டும் இந்நீரிணையை கடக்க முயன்ற 5 பேர் நீருடன் உறைந்து போனமை தெரிந்ததே.

ஒஹியோவிலிருந்து பெரானா முனை வரையிலான 27 கிலோமீற்றர் தூரத்தைக் கொண்ட குக் நீரிணையை 2001 ஆண்டுக்குப் பின்னர் எவரும் கடககவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

புலா சௌத்ரி ஆங்கிலக் கால்வாய் ,ஜிப்ரால்டர் நீரிணை,மத்திய தரைக்கடல மத்திய தரைக்கடல் வளைகுடா , கடலினா கால்வாய் ஆகியவற்றை ஏற்கனவே கடந்துள்ளார்.

இலங்கையையும் இந்தியாவும் இணைக்கும் 32 கிலோமீற்றர் பாக்கு நீரிணையை கடப்பதே தனது அடுத்த இலக்கென புலா சௌத்ரி தெரிவித்துள்ளார். (உ-55)

### கிலெஸ்பி மீண்டும் அணியில்

(சிட்னி)

அவுஸ்திரேலியா வேகப்பந்து வீச்சாளர் ஜேஸ்மன் கிலெஸ்பி மேற்கிந்திய சுற்றுப்போட்டிகளுக்கான அவுஸ்திரேலிய அணியில் இடம் பிடித்துள்ளார். குதிக்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக உலகக் கிண்ண சுற்றுப்போட்டியிலிருந்து இவர் விலகநேர்ந்தமை தெரிந்ததே

27 வயதான கிலெஸ்பி ஓய்வு பெறுவர் என எதிர்பார்க்கப்பட்ட வேளையில் மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-55)

## ஷார்ஜா சுற்றுப் போட்டி ஏப்ரல் 3 இல் ஆரம்பம்

(ஷார்ஜா)

எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாக இருந்த வேளையில், ஈராக் போர் காரணமாக போட்டியில் இருந்து தாம் விலகிக் கொள்வதாக தென்னாபிரிக்கா அறிவித்ததைத் தொடர்ந்து இடம் பெறாது என அறிவிக்கப்பட்டிருந்த ஷார்ஜா கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 3ஆம் திகதி நடைபெறும் என ஷார்ஜா போட்டிக்குழுத் தலைவர் காசிம் நுரானி தற்போது அறிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகள் தமது பங்கேற்பை மீண்டும உறுதிப்படுத்தியுள்ள வேளையில் தென்னாபிரிக்காவுக்குப் பதிலாக கென்யா மற்றும் சிம்பாப்வே ஆகிய நாடுகளுக்கு அழைப்புவிடுத்துள்ளோம. இரு அணிகளும் தமது அமைச்சுக்களின் சிபார்சுக்காக காத்திருக்கின்றன. இவை தமது பங்கேற்பை உறுதி செய்தால் 4 நாடுகளிடையே போட்டிகள் நடைபெறுமென நுரானி தெரிவித்தார்.அவர் மேலும் கூறுகையில், சமீபத்தில் முடிவடைந்த உலகக் கிண்ணச் சுற்றுப்போட்டியில் கென்யா அரை இறுதிக்கும்,சிம்பாப்வே சுப்பர் சிக்ஸ்க்கும் தகுதி பெற்றுள்ளமையால் இந்த இரு நாடுகளையும் அழைக்க முடிவு செய்தோம் என்றார்

இறுதியாக கிடைத்த செய்திகளின்படி,கென்யஅணி ஷார்ஜா சுற்றுப்போட்டியில் பங்கு பற்றும். சிம்பாப்வேஅணி அமைச்சின் முடிவுக்கு காத்திருக்கிறது.ஷார்ஜா போட்டிகள் எதிர் வரும் 3ஆம் திகதி முதல் 10ஆம் திகதிவரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் ஷார்ஜா போட்டிகளை நடாத்த அமைப்பாளர்கள் ஆலோசனை மேற்கொண்ட போதும் தென்னாபிரிக்கா மறுப்பு தெரிவித்தமையால் நாம் ஏதும் செய்யமுடியாது என ஷார்ஜா போட்டிக் குழுத்தலைவர் காசிம் நுரானி மேலும் தெரிவித்துள்ளார். (உ-55)

## ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மீது பிரதமர் தொடுத்த வழக்கு சமரசமாகத் தீர்க்கப்பட்டது

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்கட்சித் தலைவராக இருந்த போது ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு எதிராகத் தாக்கல் செய்த குற்றவியல் அவதூறு வழக்கு அண்மையில் நிபந்தனைகளுடன் இரு தரப்பினராலும் சமரசம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது வடக்குக் கிழக்கு மாகாணத்தை இரண்டு வருடங்களுக்கு விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப் போவதாக,ரணில்விக்கிரமசிங்க கூறினார் என்று ரூபவாஹினியின் செய்தியில் ஒளிபரப்பப்பட்டது.

இந்தச் செய்தியால் தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் 50 கோடி ரூபா நட்டஈடு வழங்கப்பட வேண்டுமெனவும், கொழும்பு மாவட்டநீதிமன்றத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு அண்மையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு அதனைச் சமரசம் செய்துகொள்ள இரு தரப்பும் இணங்கியுள்ளது.

இச் செய்தி ஒளிபரப்புச் செய்யப்பட்டது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது வருத்தத்தைத் தெரிவிக்கும் அறிக்கையொன்றை செய்தியில் சேர்க்கப்பட்டதெனவும் நட்டஈடாக 50 இலட்சம் ரூபா வழங்குவது எனவும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

இந்தப் பணத்தை பிரதமர் தெரிவு செய்யும் ஊடகப் பயிற்சி நிறுவனத்திற்கும் ஊடக சுதந்திரத்தை மேம்படுத்தும் பணிகளுக்கும் உபயோகிக்க ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் விருப்பம் தெரிவித்துள்ளது.


இந்த நிதியில் 25 இலட்சம் ரூபாவை அடுத்த வருடம் மார்ச் 26ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும் எனவும் எஞ்சிய தொகையை அடுத்த ஒருவருட காலத்திற்குள் வழங்க வேண்டுமெனவும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (த-5)


துருக்கியின் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்


ஜேர்மனியில் ஒரு லட்சம் பேர் அமெரிக்காவிற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர்


கொலம்பியாவில்....


குண்டுத் தாக்குதலால் அழிந்துள்ள கட்டடம்


ஈராக் போரினால் பதற்ற நிலையில் உள்ள ஈராகிய மக்கள்

# சரியான முறையில் போர் நடக்கவில்லை

## அமெரிக்காவில் பலர் கருத்து

(சிலிகான்வேலி)

ஈராக் மீதான போர் சரியாக நடக்கவில்லை என்று அமெரிக்கர்களில் பலர் கருதுவதாக கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.

மார்ச் 20 முதல் 24 வரை அமெரிக்காவில் பல இடங்களில் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. போர் நடப்பது குறித்து 71 சதவீதம் அமெரிக்கர்கள் கடந்த வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் திருப்தி தெரிவித்தனர். போரில் அமெரிக்கப் படையினர் இறந்தது, ஈராக் படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டது போன்ற செய்திகள் வெளியான பிறகு போர் நடைபெறும் விதம் குறித்து 38 சதவீதத்தினரே திருப்தி தெரிவித்தனர்.

ஈராக் மீது இராணுவ நடவடிக்கை எடுத்தது சரி என்று 72 சதவீதம் அமெரிக்கர்கள் நம்புகின்றனர். ஈராக் மீது போர் தொடுத்தது தவறான முடிவு என்று 22 சதவீதத்தினரும் கருதுகின்றனர். ஆண்களில் 80 சதவீதத்தினரும், பெண்களில் 65 சத வீதத்தினரும் போரை ஆதரிக்கின்றனர். (பி)

# அந்த்ராக்ஸ் தயாரிக்கும் நிலையில் அல்கெய்டா

(வாஷிங்டன்)

அந்த்ராக்ஸ் உயிர் கொல்லி மற்றும் இரசாயன ஆயுதங்களை தயாரிக்கும் அளவுக்கு அல்கெய்டா தீவிரவாத இயக்கம் நெருங்கி விட்டது என்று வாஷிங்டன் போஸ்ட் என்ற பத்திரிகை தெரிவித்துள்ளது. விடுதலைப் புலிகள் அதிக அளவில் பயன்படுத்தும் சயனைட்டையும் அல்கெய்டா தீவிரவாத இயக்கத்தால் தயாரிக்க முடியும் என்றும் வாஷிங்டன் போஸ்ட் தெரிவித்துள்ளது.

கடந்த 2001ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதி அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தியதில் மூளையாக இருந்த காலித்ஷேக் முகமத் என்ற தீவிரவாதியை இந்த மாதம் ஆரம்பத்தில் பாகிஸ்தானில் அமெரிக்கர்கள் கைது செய்தனர். அவரிடம் கையால் எழுதப்பட்ட குறிப் புக்கள் மற்றும் கம்யூட்டர் சாதனங்களை பறிமுதல் செய்து ஆய்வு நடத்தியதில் இது தெரியவந்துள்ளது. அந்த்ராக்ஸ் என்பது ஒருவகையான கொடிய நோய்க் கிருமியாகும். இதைப் பரப்பிவிட்டால் அணுஆயுதம் வெடித்தால் ஏற்படும் சேதத்திற்கு மேல் பேரழிவு ஏற்படும். (பி)

# அமெரிக்கா மீது அரபுலகில் ஆத்திரமும் அவநம்பிக்கையும்

(கெய்ரோ)

ஈராக் மீதான அமெரிக்க யுத்தம் அரபுலகில் ஆத்திரத்தையும், நம்பிக் கையின்மையையும் தோற்றுவித்துள்ளதாக அரபுலீக்கின் செயலாளர் நாயகம் அமீர்மூஷா கூறியுள்ளார்.

அத்தோடு ஈராக்கைக் கட்டியெழுப்பும் அமெரிக்க முயற்சிகளுக்கு இது முட்டுக் கட்டையை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.

கெயிரோவில் இருந்து அபுதாபித் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி யில் அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

ஈராக்கில் சிறந்ததொரு ஜனநாயக நாடாகக் கட்டியெழுப்ப அமெரிக்கா முன் விரும்புவதாக அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் முன்னர் கூறியிருந்ததற்கு பதிலாகவே அமீர்மூஷா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அறிவுள்ள மக்களிடம் பேசும் எவரையும் அவர்கள் நம்ப வேண்டும். ஆனால் ஈராக்கில் இத்தனை நடந்த பின்னர் அந்த நம்பிக்கை ஏற்படும் என்று கூற முடியுமா என்று மூஷா கேள்வி எழுப்பியுள்ளார். (பி-9)

# பதுங்கு குழிகளை அழிக்கும் குண்டு வீச்சு

(வாஷிங்டன்)

அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் விமானங்கள் நேற்று அதிகாலை பக்தாத் மீது குண்டு மழை பொழிந்தன.

நான்காயிரத்து 500 இறாத்தல் எடைகொண்ட நிலக்கரிப் பதுங்குகுழிகளை அழிக்கும் குண்டு முதன்முறையாக பக்தாதநகர் மீது போடப்பட்டுள்ளது.

அத்துடன் பக்தாத் நகரின் முக்கிய தொலைத் தொடர்பு மற்றும் கட்டுப்பாட்டு நிலையங்கள் மீது ஏவுகணைத் தாக்குதல் இடம்பெற்றதில் நகரின் பல இடங்களிலும் தீச்சுவாலைகளையும் புகை மண்டலங்களையும் காணமுடிந்தது.

ஈராக் போரின் 9வது நாளான நேற்று பக்தாத் நகரம் மிக மோசமான குண்டுவீச்சுக்குள்ளாகியிருப்பதாக தெரிவிக்கப் படுகின்றது. (பி-9)


ஈராக் மீதான ஏவுகணைக் குண்டுவீச்சு


பக்தாத்தில் நேசப்படைகளின் தாக்குதலின் பின்


குடியிருப்புக்களின் மீதான குண்டுவீச்சில் காயமடைந்தவர்




ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸார் கைது செய்தனர்



ஸ்பெயினில் ஈராக் போருக்கு எதிராக நடத்திய மனித சங்கிலி ஆர்ப்பாட்டம்

பாகிஸ்தானில் ஆர்ப்பட்டக்காரர் அதிபர் புஷ்ஷின் பொம்மைகளை எதித்தனர்




வெள்ளை மாளிகைக்கு அருகில் நோபல் பரிசு பெற்றவரான ஜோடிவில்லியம் ஆர்ப்பாட்டத்தின் போது கைதானரல்


கெய்ரோவில் நடந்த ஆர்ப்பாட்டம்


பஹ்ரேயினில் 10 யேரம் பேர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்



# கூட்டுப்படைகளின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரிப்பு

# இன்னும் சில தினங்களில் பக்தாத் நகர் சுற்றிவளைக்கப்படும்

(வாஷிங்டன்)

**ஈராக் மீதான போரை மேலும் தீவிரப்படுத்தவும், பக்தாத்தையும் ஏனைய முக்கிய நகரங்களையும் தம் கட்டுப்பாட்டில் கொண்டு வரவும் கூட்டுப்படையினர் தமது ஆளணி பலத்தை அதிகரிக்கத் தொடங்கியுள்ளனர்.**

**நேற்றைய தினம் பக்தாத் நகரம் மிக மோசமான குண்டு வீச்சுக்குள்ளான தாகவும் கூறப்படுகின்றது.**

**யூப்பிரிட்டிஸ் நதியின் மீதுள்ள பாலம் ஒன்றைக் கைப்பற்ற கூட்டுப்படைகள் பெரும் எத்தனம் புரிவதாகவும் பாலம் வீழ்ச்சியுறுமானால் பக்தாத் நோக்கிய முன்னேற்றம் வெகுவாக சாத்தியமாகும் என்றும் கூட்டுப்படையினர் கருதுகின்றனர்.**

**இதேவேளை, இன்னும் சில தினங்களில் பக்தாத் நகரை அமெரிக்கக் கூட்டுப்படைகள் சுற்றிவளைக்கக் கூடும் என்றும் ஆனால் அதன் பின் ஏற்படக்கூடிய வீதிச் சண்டைகள் வெகு காலம் நடைபெறக் கூடும் என்றும் ஈராக்கியத் தலைவர் ஒருவர் கூறியுள்ளார்.**

ஈராக்கிலுள்ள அமெரிக்க இராணுவத்தினரின் எண்ணிக்கையை இரண்டு மடங்காக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வாரகாலமாக ஈராக்கில் இடம்பெற்றுவரும் யுத்தத்தில் ஒரு லட்சத்து 25 ஆயிரம் அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் படைகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில் 25 பேர் பிரிட்டிஷ் வீரர்களாவர். ஏப்ரல் மாத இறுதிக்குள் இந்த எண்ணிக்கையை 2 இலட்சத்து 25 ஆயிரமாக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே திட்டமிடப்பட்ட யுத்த நடவடிக்கைக்கு அமையவே இந்த அதிகரிப்பு இடம்பெறுவதாகவும், இது இடை நடுவில் திட்டமிடப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கூட்டுப்படையினர் அடுத்த 5 முதல் 10 நாட்களுக்குள் பக்தாத்தை சுற்றிவளைக்கக் கூடுமென ஈராக்கிய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எனினும் அதனை அடுத்து இடம்பெறும் வீதிச் சண்டைகள் மாதக் கணக்கில் நீடிக்கும் என்றும் அதில் கூட்டுப்படையினர் கடும் எதிர்ப்பை சமாளிக்க வேண்டியிருக்கும் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

### ஈராக் மறுப்பு

ஈராக் யுத்தத்தின் போது கைது செய்யப்பட்ட பிரிட்டிஷ் படைவீரர்களை ஈராக் கொலை செய்துள்ளதாக பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் விடுத்துள்ள குற்றச்சாட்டை ஈராக் மறுத்துள்ளது.

அபுதாபி தொலைக்காட்சியில் தோன்றிய ஈராக்கிய தகவல் அமைச்சர் மொகமட் சயித் அல்சகாப் இந்த மறுப்பை வெளியிட்டுள்ளார்.

பிரிட்டிஷ் வீரர்கள் தொடர்பாக பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் பொய்யான தகவல்களை வெளியிட்டுள்ளார் என்று குறிப்பிட்ட அவர் ஈராக் எவரையும் கொலை செய்யவில்லை என்று மேலும் தெரிவித்துள்ளார்.

பஸ்ரா நகரத்திலிருந்து தென்பகுதியிலுள்ள அமெரிக்க பிரிட்டிஷ் படைகளை நோக்கி ஈராக் படையினரால் ஏவப்பட்ட பீரங்கிகளை பிரித்தானிய விமானங்கள் குண்டு வீசி அழித்துள்ளதாக பிரித்தானிய படைத்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

### பக்தாத்துக்கு 60 மைல் தூரம்

அமெரிக்கப் படையினர் தற்போது பக்தாத்தில் இருந்து 60 மைல்கள் தொலைவில் இருக்கின்ற ஷீம்ஹர்லா நகரத்தில் ஈராக்கிய படையினரின் உக்கிரமான தாக்குதலுக்கு இலக்காகி வருகின்றனர்.

ஷீம்ஹர்லா நகரில் இருக்கின்ற யூப்பிரிட்டிஸ் நதியில் இருக்கின்ற பாலத்தை கைப்பற்றும் நோக்கிலேயே இந்த மோதல் இரு தரப்புக்குமிடையே இடம்பெற்றுள்ளது. பக்தாத்தை நோக்கிச் செல்லும் பாதையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இப்பாலத்தைக் கைப்பற்றுவதன் மூலமே அமெரிக்கப் படையினர் முன்னோக்கிச் செல்ல முடியும் என படைத்துறை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

### ஈராக் இராணுவம் புதிய திட்டம்

பக்தாத்தை நோக்கி எதிரிகளின் படைகள் முன்னேறுவதைத் தடுக்க புதிய திட்டத்தை ஈராக் இராணுவம் வகுத்துள்ளது. அதன்படி ஆயிரத்துக்கு மேற்பட்ட இராணுவ டாங்கிகள், கவச வாகனங்கள், போர்த் தளாபாடங்களுடன் ஈராக்கிய இராணுவத்தின் சிறப்பு அதிரடிப் படையைச் சேர்ந்த பல ஆயிரம் வீரர்கள் பாக்தாத்துக்கு தெற்கில் உள்ள நஜீப் நகரத்தை நோக்கிச் சென்று கொண்டு இருக்கின்றனர். கடந்த இரு நாள்களாக வீசிய பாலைவனப் புயலைப் பயன்படுத்தி அமெரிக்க பிரிட்டிஷ் படைகளின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு அந்த அணி சென்றுள்ளது. (பி-2)

# வைகோவை விடுதலை செய்ய அகாலி தலைவர் கோரிக்கை

(புதுடில்லி)

பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த 9 வாரங்களாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் வைகோ எவ்வித நிபந்தனைகளும் இன்றி உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும் என அகாலிகளின் தலைவர் சிம்ரஜித்சிம்மான் தமிழக அரசிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் சிறைச்சாலைக்கு சென்று வைகோவை சந்தித்து பேசிய பின்னர் நேற்று செய்தியாளர் மத்தியில் பேசிய சிம்ரஜித்,

பொடா சட்டத்தின் கீழ் வைகோவையும், அவரது கட்சியை சேர்ந்த 8 பேரையும் சிறையில் அடைத்திருப்பது சட்டத்திற்கு புறம்பானது என்று குறிப்பிட்டார்.

வைகோ மீதும் அவரது கட்சியின் மீதும் பொடா சட்டத்தின் கீழ் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் பெற்றுக் கொண்டு உடனடியாக அவர்களை விடுவிக்க வேண்டு மென தமிழக முதலமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்த இவர்,

தமது கோரிக்கைகளை தமிழக அரசு ஏற்றுக்கொள்ளவில்லையென்றால் அது குறித்து சர்வதேச மன்னிப்புச்சபையிடமும், சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுவிடமும் புகார் செய்யப்போவதாக எச்சரித்துள்ளார்.

பொடா சட்டத்தின்கீழ் வைகோ தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அவலத்தை அமைதியாக பார்த்துக் கொண்டிருப்பதாக கூறி பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசுக்கு கண்டனம் தெரிவித்த சிம்ரஜித்சிம்மான்.

வைகோ அடைக்கப்பட்டிருக்கும் சிறையின் தன்மையை அறியும் மக்களவை உறுப்பினர்கள் கொண்ட குழுவொன்றை அனுப்பி வைக்குமாறு சபாநாயகர் மனோகர் யோசியிடமும், பிரதமர் வாஜ்பாயி டமும் வலியுறுத்தப் போவதாக கூறினார்.

தன்னோடு வந்து வைகோவை சந்தித்த உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் கோவிந்தர் பால்சிங்ஹா பொடா சட்டத்தின்கீழ்வைகோ தடுத்து வைக்கப்பட்டிருப்பது சட்டத்திற்குப் புறம்பானது என்பதை விளக்கி ஓர் அறிக்கை தயாரித்து, அதனை முன்னாள் சட்ட அமைச்சரும்வழக்கறிஞருமான ராம்ஜெட் மலானேயிடம் உச்ச நீதிமன்றில் சமர்ப்பிக்கப் போவதாக சிம்ரஜித் தெரிவித்துள்ளார். (பி-2)

# நியூயோர்க் நகரில் பலத்தபாதுகாப்பு

(நியூயோர்க்)

நியூயோர்க் நகரில் நவீன கருவிகள் பொருத்தப்பட்ட ஹெலிகொப்டர்களும், ஜெட் விமானங்களும் 24 மணி நேரமும் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன.

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்துள்ளதையடுத்து அமெரிக்காவிற்கு தீவிரவாதிகளால் அச்சுறுத்தல் ஏற்படலாம் என்பதால் முன்னெச்சரிக்கையாக பாதுகாப்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இதன்படி நியூயோர்க் நகரில் உள்ள முக்கிய கட்டடங்களுக்கு பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. நவீன ஹெலிகொப்டர்களும், ஜெட் விமானங்களும் வானில் சுற்றியபடி கண்காணித்து வருகின்றன. கட்டுப்பாடுகள் நிறைந்த பகுதிகளில் விமானங்கள் வேண்டுமென்றோ அல்லது தற்செயலாகவோ ஊடுருவாமல் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (பி)

# 19 ஆப்கான் கைதிகளை அமெரிக்கா விடுவித்தது

(வாஷிங்டன்)

தென் அமெரிக்காவில் கியூபாவிற்கு அருகில் இருக்கும் ``குவன்ரனாமா'' என்னும் தீவில் கைவிலங்குகளுடன் சிறை வைக்கப்பட்டிருந்த 19 ஆப்கானிஸ்தான் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்காவின் போரின் போது தலிபான்கள் என கைது செய்யப்பட்ட இப்போர்க் குற்றவாளிகள் இத்தீவுக்குக் கொண்டு செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இந்தக் கைதிகள் மனிதாபிமானமற்ற முறையில் கடுமையாக நடத்தப்பட்டுள்ளதாக உலக மனித உரிமைகள் அமைப்புக்கள் அமெரிக்காவை கண்டித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (பி-2)

# சக்திவாய்ந்த புதிய ஏவுகணை ரஷ்யா வெற்றிகரமாக சோதனை

(மொஸ்கோ)

கண்டம் விட்டுக் கண்டம் பாயும் அதி சக்தி வாய்ந்த ஏவுகணையை ரஷ்யா நேற்று முன் தினம் பரிசோதனை செய்துள்ளது.


ரப்பல் ஆர்.எஸ்.II, எம்.ஐ.சி.பி.எம் என்ற இந்த ஏவுகணை, அணு ஆயுதங்களை தாங்கி சுமார் 15 ஆயிரம் கிலோ மீற்றர் வரையில் செல்லும் திறன் வாய்ந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது.

உலகின் எந்த இலக்கையும் இந்த ஏவுகணையால் தாக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ரஷ்யாவின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள விண்வெளி ஏவுகணைத் தளம் ஒன்றில் இருந்து செலுத்தப்பட்ட இந்த ஏவுகணை ரஷ்யாவின் கிழக்குப் பகுதியில் சென்று வீழ்ந்ததாகவும் கூறப்படுகின்றது.

ரஷ்யாவின் இந்த நடவடிக்கை பல நாடுகளையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

அதேசமயம் இது அமெரிக்காவுக்கு விடுக்கப்பட்டிருக்கும் மறை முக எச்சரிக்கையாக இருக்கலாம் என்று படைத்துறை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (பி-2)







# சீனப் படகைத் தாக்கியவர்களை அறிவதற்கு சான்றுகள் இல்லை

## எரிக்சொல்ஹெய்ம் தெரிவிப்பு

(ஒஸ்லோ)

முல்லைத்தீவுக்கப்பால் சுண்டிக்குளம் பகுதியில் சீனப்படகு ஒன்றின் மது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக கண்காணிப்புக் குழுவினால் முடிவெதனையும் தெரிவிக்க முடியவில்லை. அதனை நடத்தியவர்கள் யார் என்பது பற்றி சுயாதீனமான சான்றுகள் எதனையும் தம்மால் பெற முடியாதிருப்பதாக நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம ஒஸ்லோவில் ராஜதந்திரிகள் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சீனப்படகின் பணியாளர்கள் மத்தியிலிருந்தும் சுயாதீனமான சான்றுகள் கிடைக்கப்பெறவில்லை. இலஙகையின் கடற்படை இதற்கான குற்றச் சாட்டை புலிகள் மீது சுமத்தியுளளது. புலிகள் இதில் தாம் எவ்விதத்திலும் சம்பந்தப்படவில்லை எனத்தெரிவித்துள்ளனர்.

ஒரு ஆயுதபாணி இயக்கம் என்ற நிலையிலிருந்து புலிகள் ஒரு அரசியல் அமைப்பாக படிப்படியான மாற்றத்திற்குள்ளாகிவருகின்றனர். புலிகள் தமது 16 பேர்களையும், பிறநாடுகளில் வாழும் தமிழர்களில் ஐவரையும் உள்ளடக்கி 21 பேர் கொண்ட அரசியல் குழுவை அமைத்துள்ளனர்.

இக்குழு சமஷ்டி முறை பற்றி ஆராய்வதற்கு நோர்வேயிலிருந்து ஆரம்பித்து ஸ்கண்டிநேவிய நாடுகள் பலவற்றிற்கும் செல்லவுள்ளது. சுவீடன், பின்லாந்து, டென்மார்க், சுவிற்சர்லாந்து, பெல்ஜியம், ஜேர்மனி, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் சமஷ்டிமுறை பற்றி அவர்கள் நேரடியாக பார்த்து அறிவார்கள். இவவாறு ராஜதந்திரிகள் மத்தியில் எரிக் சொல்ஹெய்ம் கூறினார். (த)

# நாடக வீடியோக் காட்சி

(யாழ்ப்பாணம்)

நாடக வீடியோ பிரதிகளை ஆவணப்படுத்தும் முயற்சியாக செயல்திறன் அரங்க இயக்கத்தினர் பிரதி சனிக்கிழமை தோறும் திருநெல்வேலியில் உள்ள தமது அலுவலகத்தில் நடத்தி வரும் நாடக வீடியோக் காட்சியில் இன்று மு.ப 10 மணிக்கு தமிழகக் கவிஞர் இன்குலாபின் "ஔவை" படக்காட்சி இடம்பெறவுள்ளது. (உ)

# மெய்வல்லுநர் உத்தியோகத்தர் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கில் சேவையாற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள், விளையாட்டுத்துறையில் ஈடுபடும் ஆசிரியர்களிடையே மெய்வல்லுநர் உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யும் பரீட்சை மேமாதம் 11ம் திகதி நடாத்துவதென்று வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு சுற்று நிருபம் மூலம் அறிவித் துள்ளது.

வடக்கு-கிழக்கிலுள்ள பாடசாலைகளில் மெய்வல்லுநர் போட்டிகளை சிறப்பாக நாடத்துவதற்கு இவ் உத்தியோகத்தர்கள் உதவுவார்கள் என்றும் பரீட்சையில் சித்தியடையும் ஆசிரியர்கட்கு விசேட பயிற்சிகள் காலத்திற்கு காலம் வழங்கப்படும் என்று மாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இப்பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 11.04.2003 ஆகும். (பி-243)

# அழகெழல் போட்டி பரிசளிப்பு விழாவும் ஓவியக் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியின் நுண்கலை மன்றத்தால் நடாத்தப்பட்ட "அழகெழல்" போட்டியின் பரிசளிப்பு விழா இன்று பி.ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அ. ஜெயதீபன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வாழ்த்துரையை பீடாதிபதி தி. கமலநாதன் நிகழ்த்தவுள்ளார்.

நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் பி. விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக தொழிலதிபர்களான நா. தெய்வேந்திரம், கே.வி. கிருஷ்ணபிள்ளை ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்றையதினம், மேற்படி போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற இசை, நடன, நாடக நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன் சித்திரப் போட்டியில் பங்கு பற்றிய மாணவர்களின் ஆக்கங்களும்காட்சிப்படுத்தப்படவுள்ளன. (உ)

## பாடசாலைச் சீருடைத் துணிபெற

# சிபார்சு செய்யும் அதிகாரம் கிராம அலுவலர் வசம்

(கொழும்பு)

பாடசாலைச் சீருடைகளுக்கான துணிகளை பெற்றுக் கொள்வதற்கு தகுதியானவர்களை தெரிவு செய்யும் பொறுப்பு, அடுத்தாண்டு முதல் கிராமசேவை உத்தியோகத்தர்களிடம் வழங்கப்படும் என மாகாண சபைகள் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சர் அலிக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மேலும் இது தொடர்பாக தெரிவிக்கையில், பாடசாலைச் சீருடைகளை வழங்குவதற்கு தகுதியானவர்களை தெரிவு செய்யும் பொறுப்புக்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்களிடம் ஒப்படைப்பதற்கு ஆலோசிக்கப்பட்டது.

எனினும், அவ்யோசனை கைவிடப்பட்டுள்ளது. கிராமசேவையாளர்களாலேயே இவ்விபரங்களைப்பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## சமாதான முன்னெடுப்புக்களுக்கு

# சமயத் தலைவர்களின் ஆதரவு இன்றியமையாதது

## கொழும்பு மாநகர மேயர்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தினால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதானத்திட்டங்களுக்கு சமயத் தலைவர்கள் வழங்கி வரும ஆதரவு இன்றியமையாதது என கொழும்பு மாநகர மேயர் திஸ்ஸன்ன குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கடந்த இரு தசாப்த கால யுத்தத்திற்கு முடிவுகட்டும் நோக்குடன் தற்போது அரசியல் ரீதியிலான தீர்வு காணும் முயற்சிகள் முன்னேற்றமடைந்து வருகின்றன.

இதற்கு இந்து, பௌத்த, முஸ்லிம், கிறிஸ்தவ சமயத்தலைவர்களின் பங்கு முக்கியமானது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சமயத் தலைவர்களின் ஆதரவும் ஆசீர்வாதமும் கிடைத்து வருகிறது.

இந்த ஆதரவும், ஆசீர்வாதமும் அத்தியாவசியமானது எனவும் மேயர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

# விபத்தில் இருவர் பலி

(கண்டி)

கண்டி திகன நகரில் நேற்று முன்தினம் பிற்பகல் தனியார் பஸ், கார் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன ஒன்றுடனொன்று மோதி விபத்திற்குள்ளானதில இருவர் உயிரிழந்தனர். மூவர் காயமடைந்தனர்.

இந்தவிபத்தில் பாதசாரிகளே உயிரிழந்திருப்பதாக கண்டிப் பொலிஸார் தெரிவித்தனர். (த)

## ஆசிய ~ பசுபிக் நாடுகளின்

# தொழில் அமைச்சர்கள் மாநாடு கொழும்பில்

(கொழும்பு)

ஆசிய-பசுபிக் வலய நாடுகளுக்கான தொழில் அமைச்சர்களின் மாநாடு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 1,2ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளன.

வெளிநாடுகளில் தொழில் புரிவோர்களின் சேமநலன் சட்டநிலைமைகள பற்றியும் இம் மாநாட்டில் ஆராயப்படவுள்ளன.

தொழில் அமைச்சர்களின் மாநாடு நடைபெறுவதற்குமுன்னர், அமைச்சின் செயலாளர்களுக்கான மாநாடு ஒன்றும் நடைபெறவுள் ளது.

இந்தியா, நேபாளம், பங்களாதேஷ் சீனா, பிலிப்பைன்ஸ் உட்பட பல நாடுகள் இம் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளன. (பி.8)

## உலக உணவுத் திட்டத்தின்

# வெற்றிகரமான செயற்பாடுகள் குறித்து அமைச்சர் ஜயலத் பிரதமருக்கு விளக்கம்

(கொழும்பு)

உலக உணவுத் திட்டத்தின் வெற்றிகரமான செயற்பாடுகள் மற்றும் அதன் நடப்புச் செயற்திட்டங்கள் குறித்து புனர்வாழ்வு அகதிகள் மீள் குடியேற்ற அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு விரிவான கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தின் விபரம் வருமாறு,

முன்னைய ஆட்சிக் காலத்தில் உலக உணவு உதவித் திட்டத்தின் கீழ் நிவாரணம் மற்றும் தேவையான வாழ்க்கை வளத்தினைப் பெற்றுக் கொள்ளும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்கும் நிறுவனமாக சமூக நலன்புரி அமைச்சு விளங்கியது.

2002 ஆம் ஆண்டின் ஆரம்ப காலப் பகுதியில் இவை புனர்வாழ்வு, மீள்குடியமர்த்தல் மற்றும் அகதிகள் விவகாரங்கள் அமைச்சுக்கு பெறப்பட்டு உலக உணவு நிகழ்ச்சித் திடடத்தின் எமது நாட்டிற்கான வதிவிடப பிரதிநிதி ஊடாக எனது அமைச்சின் மூலம் வினைத்திறனுடனும் நன்முறைத் தாக்கத்துடனும் வெளிப்படையாகவும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அமுலாக்குவதன் மூலம் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி மனித வளத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு உலக உணவுத் திட்டம் வழிவகுத்துள்ளது.

உலக உணவுத்திட்டத்தின் கீழ் 2002 மார்ச் மாதம் 17.89 மில்லியன் அமெரிக்க டொலர் உதவி வழங்கப்பட்டது.

தவிர, கடந்த ஆண்டில் 550 மெற்றிக்தொன் உதவி நிவாரண உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன. இது இலஙகை அரசாங்கத்திற்கு 105 மில்லியன் ரூபாவைச் சேமிப்பதற்கு வழிவகுத்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, பொலனறுவை, மன்னார் மாவட்டங்களில் 192 திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் நீர்ப்பாசன கால்வாய்கள், சிறுகுளங்கள் புனரமைப்பு, சிறிய வீதிகள் புனரமைப்பு, மீள்குடியமர்த்துகைக்கான செயற்றிட்டங்களும் உள்ளடங்குகின்றன.

தாய், சேய் போஷாக்குத் திட்டம் உட்பட குழந்தைகளுக்கான போஷாக்குத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் 400றகு மேற்பட்ட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)

## இந்தியச் சிறையில்வாடிய

# இலங்கைத் தமிழர் திருப்பி அனுப்பப்பட்டார்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் அனுதாபி எனச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த இலங்கையரான கே. சற்குணலிங்கம் என்பவர் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

1993 ஆம் ஆண்டு சென்னைக்கு அப்பாலுள்ள வங்கக் குடாவில் எம்.வி. அகத் என்னும் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதுடன், இந்தியக் கடற்படையும், கரையோரக் காவல படையும் ஒன்பது இலங் கைத்தமிழரை அதில் இருந்து மீட்டெடுத்திருந்தது.

இவர்கள் மத்திய சிறையில் பல வருடங்களாக அடைக்கப்பட்டு பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட நிலையில பொலிஸ் நிலையத்தின் விசேட முகாமில் அடைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் ஐவர் இந்தியாவிலிருந்து வெளியேறுவதற்கு வேண்டிய ஆவணங்களை பெற்றுள்ளனர். கேசவன் என்பவர் சிலவராங்களுக்கு முன் முகாமை விட்டு தப்பி ஓடி விட்டார்.

இவர்களில் சற்குணலிஙகம் நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு வேண்டிய ஆவணங்களைப் பெற்றெடுக்க முடிந்ததால் ஞாயிறன்று இலங்கைக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டார். (உ)


யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தால் நடாத்தப்படும்

**நன்றி செலுத்தும் வழிபாடு**

தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம்

அவர்களின் வாழ்வின்

**105ஆவது பிறந்ததின நினைவுகூரல் வழிபாடு**

இடம் : சென். ஜோன்ஸ் ஆலயம் சுண்டுக்குளி

காலம் : 2003-03-31 திங்கட்கிழமை மாலை 4.00 மணி (S.L.T)

நினைவுரை

திரு. சி. வி. கே. சிவஞானம்

இறைசெய்தி

அருட்தந்தை மைக்கல் சௌந்தரநாயகம்

(யாழ். மறைக்கோட்ட முதல்வர்)

யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

செயலாளர்

(6861) யாழ். கிறிஸ்தவ ஒன்றியம்


# சினி யாத்ரா இயக்குநர்கள் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும் சினியாத்ரா திரைப்பட விழாவில் கலந்து கொள்ள வருகைதந்துள்ள திரைப்பட இயக்குனர்கள் இருவர் நேற்று வலம்புரிக் காரியாலயம் வந்திருந்தனர்.

வலம்புரி பத்திரிகை ஆசிரியர் குழுவுடன், இன்றைய காலகட்டத்தில் கலைஞர்களின் பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் அமெரிக்க செயற்பாடுகள் பற்றி அவர்கள் கலந்துரையாடினர்.

பேராசிரியர் சிவச்சந்திரன் இவர்களை அழைத்துவந்திருந்தார். (பி.)

இன்று மானிப்பாய் மருதடி விநாயகர் கோயில் கொடியேற்றம்

## அருள் மருதடியான் போற்றி

அரசு வேம் பத்தி இத்தி ஆலம் மா இலுப்பையோடு
தெரு, குளம் ஆற்றின் ஓரம் தேசுடன் கோவில் கொண்டு
பரவிடும் அடியார்கட்குப் பரிந்தருள் செய்தேயென்றும்
மருதடித் தலத்தில் வாழும் மாகண பதியே போற்றி

மஞ்சளில் மண்ணில் மாட்டின் சாணத்திற் சந்தனத்திற்
கொஞ்சமா யெடுத்துக் கொண்டே கூப்பிடிற் சேர்வாயங்கே
நெஞ்சகம் கனிந்து நித்தம் நினைப்பவர்க்குள்ளே தோன்றி
அஞ்சலென் றணைத்துக் காக்கும் அருள்மரு தடியான் போற்றி

தடையினரல் அடியோம் நாங்கள் தாங்கிடும் துயரம் போமோ
விடையிணைக் காணா தென்றும் வெருட்சியோடுருகு கின்றோம்
மடைதிறந் தருளைப் பாய்ச்சும் மருதடிப் பிள்ளையாரே
கொடியுயர்ந் தேறுமிந்நாள் குறைகளைத் தீர்ப்பாய் போற்றி

– சிற்பி

### அதி-உயர் நீதிமன்றத் தீர்ப்பு

# பொ. ஐ. மு. – ஜே. வி. பி கட்சிகளின் ஜனநாயக விரோத போக்கிற்குச் சான்று

(கொழும்பு)

2001ஆம் ஆண்டுபொ.ஐ.மு.யும், ஜே.வி.பியும் இணைந்து அமைத்திருந்த தகுதிகாண் அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறிச் செயற்பட்டது. இதனை இலங்கையின் அதியுயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளிப்படுத்தியுள்ளது.

இந்த இரு முன்னணிகளும் மீண்டும் இணைந்து செயற்பட முனைவதன் மூலம் மக்களின் உரிமைகளை மேலும் கால்களின் கீழ் போட்டு மிதிப்பதற்கு ஆயத்தமாகின்றன.

கடந்த புதனன்று ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும்,

தகுதிகாண் அரசு நடாத்துவதற்கு உத்தரவிட்டிருந்த கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு சட்டவிரோதமானது என்று கடந்த வாரம் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி யுள்ளது.

மட்டக்களபபு மற்றும் வன்னி மாவட்டத்தின் பலலாயிரக்கணக்கான வாக்காளர்களை வாக்களிக்க விடாமல் தடுத்ததன் மூலம் அவர்களின அடிப்படை உரிமைகளை மீறியிருந்ததாக கடந்த செவ்வாயன்று உச்சநீதிமன்றம் தெரிவித்திருக்கிறது.

மேற்படி இரண்டு சந்தர்ப்பங்களிலும், பொ. ஐ. முன்னணியினதும், ஜே.வி.பியினதும் ஜனநாயக விரோத சிந்தனையை வெளிப்பட்டிருக்கிறது.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பாக இன்று இத்தலைமைகள வாயடைத்துப் போயுள்ளன என்று கூறப்பட்டுள்ளன. (உ)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

பாலர் கல்விக்கழகத்தின் கீழ் இயங்குப் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று பி.ப 3 மணிக்கு கழகக் காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

கியூடெக் நிறுவனத்தைச் சேர்ந்த முன்பள்ளி இணைப்பாளர் எம். பத்மா இதில் கருத்துரை வழங்கவுள்ளார். (உ)

## கூட்டம்

(சில்லாலை)

யாழ். மாரீசன் கூடல் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் அபிவிருத்திச்சங்க கூட்டம் இன்று பி.ப.3.00 மணிக்கு பாடசாலை அதிபர் அ. நோபேட விஜயகுமா் தலைமையில் இடம்பெறவுள்ளது. (உ-58)

# சுகாதாரப் பகுதியினரால் உணவுவிடுதியில் சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் உள்ள பிரதான உணவு விடுதிகள் கடந்த வார இறுதிப் பகுதியில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் குழு மூலம் திடீர்ப் பரிசோதனைகள் செய்யப்பட்டது.

சில புதிதாக ஆரம்பிக்கப்பட்ட உணவு விடுதிகள் பல வித சுகர்தாரக் குறைபாடுகளுடன் காணப்பட்டமை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றை திருத்துவதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டது. மேலும் திறந்த நிலையில் ஈக்கள் மொய்க்கும்படி கடைகளில் வைக்கப்பட்ட உணவுப் பண்டங்கள் அழிக்கப்பட்டன.

யாழ். நகரசந்தைப்பகுதியில் சுட்டுத்துண்டு இடப்படாது விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருட்கள் தொடர்பாகவும் பரிசோதனை செய்யப்பட்டு உணவுச் சட்ட வதிகளிற்கு அமைவாக தயாரிக்கபட்டு உரிய முறையில் லேபல் செய்யப்பட்டு வற்பனை செய்யும் படியும் அறிவுறுத்தப்பட்டது. (பி-252)


# கேள்வி அறிவித்தல்

## வீடமைப்பு பெருந்தோட்ட, உட்கட்டமைப்பு அமைச்சு கட்டிடத் திணைக்களம்

1. யாழ்ப்பாண பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீட கட்டம் 11 **(PHASE I)** விரிவுரை மண்டப பூர்த்தி நிர்மாணம் மற்றும் நிர்வாக நூலக கட்டிட நிர்மாணத்திற்கான பொறியிடப்பட்ட கேள்விகளை கட்டிடத்திணைக்கள கேள்விச் சபைத் தலைவர் 2003-04-24ஆந் திகதி மு.ப. 10.00 மணிவரை கோருகின்றார்.
2. கேள்வி ஆவணங்களை யாழ்ப்பாணம், கட்டிடங்கள் திணைக் களம், பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அவர்களிடம் 2003-04-11ஆந் திகதி பி.ப. 3.30 மணி வரை மீளளிக்கப்படாத ரூ. **1000/-** செலுத்திப் பெற்றுக் கொளளலாம்.
3. கேள்விகள் மூடப்பட்டதும் உடனடியாக பத்தரமுல்ல, செத்சிரிபாய, இரண்டாம் மாடி கட்டிடங்கள் திணைக்கள ஒப்பந்தக் கிளையில் திறக்கப்படும் கேள்விகள் திறககப்படும் போது கேள்விதாரர் அல்லது அவர்களுடைய அங்கீகாரம் பெற்ற முகவர்கள் சமுகமளிக்கலாம்.
4. கேள்விப் படிவங்கள் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத் தால் அபிவிருத்தி செய்யப்பட்ட நிர்மாண ஒப்பந்தக்காரர்களின் தேசிய பதிவு மற்றும் தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் **(ICTAD) M5** மற்றும் அதற்கு மேல் பதிவு செய்து கொண்ட மற்றும் இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர்கள் சங்கத்தில் அங்கத்துவம் பெற்ற **(NCASL)** கட்டிட நிர்மாண ஒப்பந்தகாரர்களுக்கு மட்டுமே வநியோகிக்கப்படும் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும் முன்னர் விண்ணப்பதாரியினால் ஒப்பந்தக்காரர்கள் பதிவுப் புத்தகம் மறறும் அங்கத்துவ அட்டை சமர்ப்பிக்கப்படல் வேண்டும.
5. பொறியிடப்பட்ட கேள்விகள் பத்தரமுல்ல, கோட்டே ஸ்ரீ ஜயவர்த்தனபுர "செத்சிரிபாய" கட்டிடங்கள் திணைக்களம், கேள்விச் சபைத் தலைவரிடம் நேரடியாக ஒப்படைக்கலாம். அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்ப முடியும்.
6. தாமதப் பிணைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாதாகையால் பாதுகாப்புச் சோதனை நிமித்தம் கேள்வி மூடப்படும் நேரத்திற்கு ஒரு மணி நேரம் முன்னரே செத்சிரிபாய வளவுக்குள் பிரவேசிக்கு மாறு கேட்கப்படுகிறார்கள்.
7. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம், மேலதிக விபரங்களை யாழ்ப்பாணம், கட்டிடத் திணைக்களம், பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**ஏ.டீ. விக்கிரமசிங்க,**

**பணிப்பாளர்,**

**கட்டிடத் திணைக்களம்,**

**"செத்சிரிபாய" ஸ்ரீ ஜயவர்த்தனபுரகோட்டே,**

**பத்தரமுல்ல.**

(C/5892)


# "சினியாத்ரா" வில் இன்னி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப படிப்புக்கள் அலகு வடக்கு-கிழக்கு மாகாணக்கல்வி கலாசார விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு, இலங்கை ஆசியத் திரைப்பட மையம் ஆகியவற்றுடன் இணைந்து திருகோணமலை மையத்தின் ஏற்பாட்டில் யாழ். பல்கலையில் இடம்பெற்றுவரும் சினியாத்ரா திரைப்படவிழாவின் நான்காம் நாளான இன்று மு.ப. 10 மணிக்கு வசந்த ஒபேசேகரவின் "தீர்த்த யாத்ரா" (தீர்த்த யாத்திரை) சிங்களத் திரைபடமும் பி.ப. 2 மணிக்கு தர்மசேன பத்திராஜாவின் "மத்துயம தவச்" (எதிர்காலத்தில் ஏதோ ஒரு நாள்) சிங்களத் திரைப்படமும் பி.ப. 4.30.மணிக்கு "பொன்மணி" தமிழ்த் திரைப்படமும் காண்பிக்கப்படவுள்ளன.

இத்திரைப்படங்களின் கதைச் சுருக்கத்தை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

### தீர்த்தயாத்ரா (தீர்த்தயாத்திரை)

வசந்த ஒபேசேகராவின் திரைப்படமான "தீர்தயாத்திரை" அவரது முன்னைய திரைப்படங்களில் இருந்து அதன் கதைரீதியாகவும் கருப்பொருள் ரீதியாகவும் வேறுபட்டுச செல்கிறது எனலாம்.



உண்மையான வாழ்க்கை நிகழ்வுகளில் இருந்து அருட்டுணர்வு பெற்று எழுதப்பட்ட இவ்விபரணைகள் கொண்டாடப்படுவதற்குரிய காரணம், அவை வெளிப்படுத்தும் ஆற்றல், இன்னும் குற்றம்புரியும் உணர்வு நிலைகள், அவற்றின் உளவியல், சமூக அரசியல் ஆகியவை உள்ளடங்கியவற்றின் நாடகமயப்படுத்தலே தொழில் நுட்பரீதியாக ஒபேசேகரா பன்முக அடுக்கு முறையென்று அவரால் கூறப்படும் முறையை பாவித்து இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பவை ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டுவர படிமங்களையும் ஒலியமைப்பு முறைகளையும் ஆக்கரீதியாக அருகருகே வைத்து, நேரடியான தெளிவான கதை சொல்லல் அல்ல என்னுடையது என்பதை தெளிவாக்கிஉள்ளார். இந்த வகையில் வழமையான இலங்கை படத்தயாரிப்பாளர் மத்தியிலிருந்து வரும் ஒரேயொரு பரிசோதனைக்குரிய நெறியாளர் இவரே.

துண்டுதுண்டாக கதைகள் சொல்லப்படும் முறையை ஜனரஞ்சக வாசகர்கள் சந்திக்கும் போது, அதில் வரும் காட்சிகள் தர்க்க முரண்பாடுடையவையாக அவர்களுக்கு தெரியும். இதனால் குழப்பம் விளையலாம். உண்மையைச் சொல்வதனால் இதற்கு நேர் மாறானதே நடந்திருக்கிறது. திரைக்கதை எழுதுவதில் திறமைமிக்கவரான ஒபேசேகரா தனது பல்வகை அடுக்கு உத்தி முறையை பாவித்த தன்மையானது சிக்கலை அவிழ்க்கும் விடுகதைபோல் செய்யப்பட்டுள்ளதால் நேயர்கள் கதையை இனங்கண்டு கொள்வது சாத்தியமாகின்றது. இதனால் வர்த்தகரீதியாகவும் உயர்தர ரசனை ரீதியாகவும் வெற்றி பெறுகிறது.

இன்னும் உணர்ச்சி மிக்க உண்மைக்குப் புறம்பான நாடகப் பாணித் திகில் கதைகள் எழுதுபவர் ஒபேசேகரா என்று எடுத்துக் கொள்வது தவறு. ஜனரஞ்சக்கூறுகள் அவருடைய கதைகளில் இருந்தபோதும் சிக்கலான,

வழமைக்கு மாறான உறவுமுறைகளை ஆய்வுசெய்வதாக அவை இருக்கும். இந்த அவலத்தில் இருந்து மீள்வதற்கான வழியாக வன்முறை, கொலை, மரணம் ஆகியவையே உள்ளன.

வசந்த ஒபேசேகராவின் புதிய படத்தில் அவரது படங்களுக்குரியவையாக சொல்லப்படும் எவையும் இல்லை. இதில் வன்முறையில்லை. உடல்ரீதியான செயற்பாடு சாவு இல்லை.

ஆனால், வன்முறை என்பது இன்னொரு வகையாக உள்ளது. கதாநாயகிக்கு ஏற்படும் மன அழுத்தம், சாவு என்பது கூட உடல் ரீதியானது அல்ல. அது உணர்வு பூர்வமானது ஒரு மத்தியதர வர்க்க செல்வந்த குடும்பத்தின் ஒரேயொரு பிள்ளையாக வளர்க்கப்பட்ட ஒரு இளம்பெண் திடீரென தான் தத்தெடுத்து வளர்க்கப்பட்ட பிள்ளை என்பதை அறிகிறாள். அவளுடைய முன்னைய தந்தை, தாய் அவளுக்கு வரப்போகும் கணவன், அவளுடைய நணபர்கள் ஆகயோரோடு இருந்த உறவு முறை சிதறிப்போகிறது. அவள் மேல் கொப்பப்.. எல்லாவிதமான அர்ப்பணம் அன்பு யாவும் வீணாய்ப் போகின்றன. இப்போ கசப்பும், பகைமையும் உறவுமுறைக்குள் நுழைகின்றன. இவற்றில் மிகத்தீவிரமானது அவளை மணக்கஇருப்பவன் எடுக்கும் நிலைப்பாடு. அதவாது அவளுடைய சமூக அந்தஸ்த்து இப்போ சமூக வாழ்க்கையில் வெற்றிபெற்ற மேல் தட்டு மத்திய தர வர்க்க சட்டத்தரணியின் கௌரவத்திற்குரிய மகளல்ல. அவள் யார்? அவள் யாராக இருக்க முடியும்? ஒரு நாடோடியின் மகளாக தளளிவைக்கப்பட்ட சாதியிலிருந்து வருபவளாக இருக்கலாம். இத்திரைப்படம் அவளது உண்மையான தாய், தந்தையரைத் தேடிக்கண்டு பிடிக்கும் பயணத்தினதும் இறுதியில் தனது அடையாளத்தை கண்டுபிடிப்பதிலும் ஆவணமாக உள்ளது. ஒபேசேகரா அவளது பூர்வீகம் பற்றிய தேடலில் தனது பன்முக அடுக்கு உத்திமுறைகளான முன்னுக்கு போகும்(**Flash Forwards**) பின்னுக்கு நகரும் காட்சிகள் (**Flasx Backs**) அதிகற்பனாக்காட்சிகள் ஆகியவற்றையும் கைவிடவில்லை. இறுதிக்காட்சி வரும் வரை எல்லாவற்றையும் இறுக்கி வைத்திருக்கிறார். அவளுடைய இரட்டை சகோதரியை இறுதியில் எதிர்கொள்ளுதல் எல்லாம் சேர்ந்து வெறும் கற்பனாவாத மாயைகளை அழித்துவிடுகிறது. உண்மை வெளிப்பட துன்பமயப்பட்ட தேடுதல் முடிவுறுகிறது.

### மத்துயம் தவஸ (எதிர்காலத்தில் ஏதோ ஒரு நாள்)

இத்தாலிதான் அவர்கள் கனவுலகு. தம்மிகாவும் லயனலும் திகில் தரப்போகும் பிரயாணம் பற்றியும் சட்டவிரோத நுழைவும் அதனால் தேனும் பாலும் வழியும் அந்த நாட்டில் அவர்களை எதிர்பார்த்திருக்கும் தங்கமான சந்தர்ப்பங்கள் பற்றியும் கதைக்கின்றனர். இந்த விளிம்பு நிலை பாதாள உலகப் பாத்திரங்கள இருவரும் அரசியல் வன்முறை, சமுக அவலம் ஆகியவற்றை நோக்கி விரியும் மைய அரங்கு நோக்கி வருகின்றனர் அங்கே அவர்கள் அழிவையும் துன்பத்தையும் நோக்கி வெகுவிரைவாக மாறிக்கொண்டிருக்கும் சமூகத்தில் நடிகர்களாகவும் வீரதீரம், காதல், திகில் அதிகாரம் ஆகியவற்றை தேடும் நடிகர்களாகவும் முகவர்களாகவும் இருக்கின்றனர். இது பொலிஸாரின் கள்ளரும் என்கிற கதையே ஆயினும் ஒரு முக்கிய வித்தியாசம் அதாவது இங்கே வெற்றிபெறுவோரோ பாதிக்கப்படுவோரோ என்று எவரும் இல்லை.



இத்திரைப்படம்80களின நடுப்பகுதியிலிருந்து இலங்கையைக் கௌவிக் கொண்ட அரசியல் வன்முறைபற்றி சிந்திக்க வைப்பதாகும். எளிமையான உணமைபோல் தோற்றம் தருகின்ற இக்கதை வன்முறையில் மூழ்கியுள்ள நாட்டின் பகுதிகளையும் அதன் தேசிய எல்லைகளையும் தேசங்களுக்கிடையேயான அபிலாசைகளையும் ஆற்றலுடன் விளக்கிச் செல்கிறது. சினிமாவுக்கென உருவாக்கப்பட்ட சொல்லாடல் மூலம் பன்முகக் கலாசார கிராமப்புற அழகு தோய்ந்த ஜனரஞ்சக நகர்ப்புற கோள மய கலாசார பொருளாதார நிலைகளையெல்லாம் ஊடுருவிச் செல்லவைக்கிறது. ஜனரஞ்சகமும் நவீன கலா யாக்கமும் ஒன்றிணைக்கப்பட்ட நிலையில் ஏககாலத்தில் திகில், இன்பியல்,துன்பியல் அனைத்தும் வெளிக்கொணரப்படுகின்றன.

### "பொன்மணி" (உங்கள் மகளின் கதையாகலாம்)

யாழ்ப்பாண இந்துக் குடும்பக் கடைசிப் பெண் பொண் மணி பருவமடைந்த இவள் தனது அக்காவின திருமணம் எப்போது நிறை வேறும என்று காத்திருந்தாள். இவள் தாழந்த குல கிறிஸ்தவனைக் காதலித்தால குடும்ப உறவில் ஒரு முடிவெடுக்க வேண்டியிருந்தது. அவள் தன்காதலனுடன் ஓடி விடுகிறாள. கிறிஸ்தவ தேவாலயத்தில் இவர்களுக்கு திருமணம் நடைபெறுகிறது. பொன்மணிக்கு ஏற்கனவே மணம்பேசப்பட்ட ஒருவ்னின் கையாளால் அவள் சுடப்படுகிறாள். பிரேத ஊர்வலத்துடன் கதை முடிகிறது.

இப்படத்தை முத்தையா இராஜசிங்கத்தின் அனுசரணையுடன் காவலூர் இராஜதுரை தயாரித்தார். பத்திராஜா டைரக்டராகவும், டொனாட் கருணரட்ண ஒளிப்பதிவாளராகவும் செயற்பட்டனர். படைப்பாற்றல் திறமைவாய்ந்தவர்கள் பலர் பங்கேற்று நடித்துள்ளனர். திருமதி சர்வமங்களம் கைலாசபதி, டாக்டர் சிவஞானசுந்தரம் (நந்தி) மின்பொறியியலாளர் திருநாவுக்கரசு, விரிவுரையாளர் திருமதி பவானி, திருநாவுக்கரசு, மாவட்ட நீதிவான் எஸ். யோகநாதன், மாநகர ஆணையாளர் எல். ஆர். அழகரத்தினம், நகரசபை உறுப்பினர் மன்மத ராஜா், தகவல் திணைக்களத்தைச் சேர்ந்த செல்வி கமலாதம்பிராசா, விரிவுரையாளர் சித்திரலேகா,



மௌனகுரு, எம.எஸ். பத்மநாதன், எம. சண்முகலிங்கம், ஆர். இராஜசிங்கம், எஸ். ரமேஸியஸ், இராஜேஸ், கதிரவேல், லடிஸ் வீரமணி ஆகியோர் நடித்துள்ளனர். கதாநாயகனாக அரசாங்க ஊழியர் கே. பாலச்சந்திரனும் கதாநாயகியாக நடிகை சுபாசினியும் திறம்பட நடித்துள்ளனர்.

# தெய்வத்தமிழாம் திரு முறைகள் பிழையின்றிப் பண்ணறிந்து,பக்தியுடன் பாடப்படவேண்டியவை

கலாபூஷணம்
கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன்

திரு என்ற சொல்லுக்கு செம்மை, மங்களம், தெய்வீகமானது, தெய்வத் தன்மை பொருந்தியது, சிறப்புக் குரியது எனப்பல பொருள்கள் உள. முறை என்றால் ஒழுங்கு, நேர்த்தி என்று பொருள். திரு முறை என்ற தொடர் தெய்வத் தன்மை பொருந்திய ஒழுங்கு படுத்தப்பட்ட நூல்வரிசை என்ற பொருளில் குறிப்பிடப்படுகிறது.

'வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்' என்பது திருமந்திரம். இதனை நிறுத்த பிறிதொரு கருத்து குறிப்பிடத் தக்கது. 11ஆம்திரு முறையில் திருவாலவாயுடையார் திருமுகப்பாசுரம் இறைவனாலேயே திருவாய் மலர்ந்தருளப் பெற்றது. சுந்தரர் மணிவாசகர், சேக்கிழார் ஆகியோரிடம் தாமே கேட்டும் அடி யெடுத்துக் கொடுத்தும் திருப்பாடல்கள் அருளிப்பெற்றமை ஈண்டு கவனிக்கத் தக்கது. 'அருச்சனை பாட்டேயாகும். ஆதலால் மண்மேல நம்மைச் சொற்றமிழ் பாடுக' எனவும் பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக என்றும் அமையும் தொடர்கள் நோக்கத்தக்கன. 'பித்தா' எனவும் 'தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' எனவும் ,'உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய வன்' எனவும் இறைவன் அடியெடுத்துக் கொடுத்தமை அறியக் கிடக்கின்றது.

'தேவாரம் வேத சாரம்'என்று காசி வாசி செந்திநாதஐயர் விளக் கியிருப்பது காணலாம். முதலாம் திருமுறை 1வது பாடல் 1 வது அடி 'தோடுடைய என ஆரம்பிக்கிறது.இதில் த்+ஓ=தமிழ்+ஓங்காரம்-சிவம்+சக்தி என்ற தத்துவம் விளக்கப்படுகிறது. மார்கழித்திருவாதிரையில் சிதம் பரத்தில் ஓடாது நின்ற தேர் ஓடவும், இறைவனை இன்பமயமான விம்ப மாகக் காட்டும் கொடித்தம்பத்தில் கொடியேறவும் செய்த பெருமை தமிழ் வேதத்திற்கு உண்டு.

இயற்றமிழ்,இசைத்தமிழ்,நாடகத்தமிழ் என்ற முத்தமிழும் தரிசனம் தரும் தெய்வத்தமிழ் படைப்புக்களே திரு முறை.

## திருமுறை ஓதுவார்

திருமுறை ஓதுகின்றவர்எப்படி இருக்கவேண்டும் என்பது பற்றி கந்தர்மடம் சுவாமிநாதபண்டிதர் திருமுறைப் பெருமை என்றநூலில் நிறையவே குறிப்பிட்டுள்ளார். அதன் படிநோக்கின் ஒரு சிலரைத் தவிர ஏனையோர் சற்றும் பொருத்தம் இல் லாதவர். 'மூல பண்டாரம் வழங்கு கிறான் வந்து முந்துமினே ' என்பது திருவாசக அடி. பண்டம் என்றால் பொருள்.பண்டாரம் என்றால் கருவூலம். மூல பண்டாரம் என்பது கருவூலத் தின் உரு மூலமாகிய சிவன். பண்டா ரம் எனும்போது சிவனைப்பாடுகின்ற, பணி செய்கின்ற அருளாளரைக் குறிக் கின்றது. ஓதுவார் என்று சொல்வ தற்கு பலர் நாணம் கொள்கிறார் கள்.பதவியைப் பெருமையாகக் கருதி இத்தகைய சொற்களைப் புறக் கணிப்பவர்களுக்கு இது சமர்ப்பணம்.

சைவ அபிமானியாக ,விபூதி உருத் திராக்கதாரராய்,சிவதீட்சை பெற்ற வராய்,பதி,பசு,பாச இலக்கணம கற்ற வராக ,சைவபோசனத்தவராக,சிவனை மறவாச் சிந்தையாளராக இருப்பவரே திருமுறை ஓதத் தகுதியுள்ளவர். ஓதுவார்கள் அபரக்கிரியையில் பாட முடியாது. பண்முறை நுணுக்கம் அறிந்து தமிழிசையை பக்குவமாக பாடக்கூடிய தகுதி அவசியமானது. ஓதுவார்களுக்கு கோலம், சீலம் ஆகியன இன்றியமையாதன.

சனக் கூட்டத்தின் முன் புகழுக்காக வும்,தம்பெயரை வெளிப்படுத்தவும், சுய நலத்துடனும்,பலர் திரு முறை பாட முற்படுகின்றனர். தெரு வீதி களில் நாஸ்தீகம் பேசியும், திருக் கோயில்வீதியில் ஆஸ்தீகம்பேசியும் வருகின்ற போலிவேடம் நீக்கப்பட வேண்டும். பக்தியின்றி பண் இசைப் பது விரும்பத்தகாது.

## சமகாலத்தில் திருமுறை

தெய்வத் தமிழ் சூரியன் ,சந் திரன் வாழும் வரை வாழும்'நாங் கள் இல்லாவிட்டால் இன்று திரு முறை எவ்வாறிருக்கும். நாங்களே திருமுறையை வளர்த்தோம்' என்று பிதற்றுகின்ற வேடதாரிகளின் வார்த் தைகள் வேடிக்கைக்குரியன. திரு முறையை யாரும் தூக்கிப் பிடிக்க வேண்டியதில்லை. அதனைப் போற்றிப் பரவுவதே எம் கடமை. கோயில் களில் 10 அல்லது 15 நாள்கள் வேதனத் துடன் பணி செய்து விட்டு வாய் வட்டுக் கேட்டுப் பட்டம் வாங்கிச சூடி மகிழ்கின்ற பெரியவர்கள் திரு முறைக்கு என்ன மதிப்பளிக்கிறார் கள்?

திருக்கோயில் கிரியைநெறியில் தோத்திரத்தின் பின்பே வாழ்த்துக் கூறப்பட வேண்டும். ஆசிர்வாதத்தில திருமுறைக்கும் வாழ்த்துஉண்டு. திருத்தலங்களிலபல இடங்களில் இதைக் கவனிக்கத்தவறுகிறார்கள். பாட்டும்பொருளும் பொருளாற்பொருந் தும் பயனே நிறைவானது. சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல் லிய பொழுதே முழுப்பயனும் கிடைக் கும். திருமுறை பாடும் பல இடங் களில் ,இந் நேரத்தில் அருச்சனை செய்யப்படுவதும், விபூதி முதலான பிரசாதம் வழங்கப்படுவதும் இன்று தாராளமாகக் காணக்கூடிய நிகழ்வு கள.12 திருமுறை பாடவேண்டிய விடத்து பஞ்சபுராணமும், பஞ்சபுராணம் பாட வேண்டிய இடத்து தேவாரம் புரா ணம் அமைவதற்கு முயலுகின்ற இந்து மத உபாசாரர்கள் உணர வேண்டும்.

திருமுறை பாடுவதற்கு பல இடங் களில் பலர் போட்டியுடன் முன் வருகிறார்கள். போட்டியிடுபவர் களில் 99வீதத்தினர் முழுப்பிழையா கவே பாடுகிறார்கள்.அவர்களின் பிழைகள்சொல்லில் அடங்கா. 'திருவாக் கும் செய்கருமம்' 'ஐந்து கரத்தனை' ஆகியவற்றைப் பாடி ஆரம்பிக்கி றார்கள்.பெரியபுராணம் பாடவேண் டிய வேளையில் 'மூவிரு முகங்கள் போற்றி','ஆறிரு தடந்தோள்வாழ்க', 'வான்முகில்' , 'பரமனை மதித்திடாப் பங்கையாசனன்' என்றெல்லாம் பாடுகிறார்கள்.

## பிழையாகப்பாடுதல்

திருமுறைகளின் அடிகளில் மிகக் கொடுமையான தவறுகளை விடுகிறார்கள்

'பிடியதன் உருகுமை...'

'அங்கமும் வேதமும் ஓதும் நால்வர்...'

'கங்குல் விளங்கரி ஏந்தி ஆடும்...'

'பொங்கழல் உருவன் பூதநாய கனால் வேதமும்..'

'நல்லூரில் ந[illegible]

நாதனே...'

'கூலி கொண்டு அக்கோலால் மொத்துண்டு...'

'வண்டு பாட மயில்ஆட மான்கன்று துள்ள...'

'குளிர என் கண்கள் குளிர்ந் தனவே...'

'அந்தணர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலம்...'

மற்றுபாறறு எனக்கு...'

'இனிப்புற வாததன்மை...'

கற்றுணைப்பூட்டியோர் கடலினுட் பாய்ச்சினும்...'

'உலகெலாம் உணர்ந்து ஓதுதற் கரியவன்...'

என்று இப்படி ஆயிரம் பிழை களை விடுகிறார்கள். திருத்து வாரும் இல்லை; திருந்துவாரும் மிலலை. பாடுகின்றபோது 'கட்டி' என் பதை காட்டி என்பது போல குறில் களை நெடில்களாக உச்சரிக்கிறார் கள். சொற்களைச் சப்புகிறார்கள்.

விழாவின் ஆரம்பத்தில், கூட்டுப் பிரார்த்தனையில்,ஒரு தடவைக்கு மேல் பாடுவதும் சங்கதி செய்வதும் நிரவல் செய்வதும் ஏற்றுக்கொள் ளத்தக்கதே! சுவாமி சந்நிதானத் தில் ஓர் அடிஒரு தடவையே பாடப்பட வேண்டும். இன்று சுவாமி சந் நிதியில் தாம் நினைத்த படியெல் லாம் பாடுகிறார்கள். வாயில் வரும் இசையில் கண்ட இராகங்களில் பஜனை பாடுவது போல திருமுறை யைப் பாடுகிறார்கள். இது அடி யோடு நீங்கவேண்டும் .குறித்த நோய்க்கு குறித்த மருந்தே நிவாரணமாவது போல,குறித்த சந்தர்ப்பத்தில் குறித்த பண்ணில் பாடப்பட வேண்டும். பக்தியோடு பாடுகிறோம் என்று கூறிக்கொண்டு கதை சொல்வது போல வும்,கத்துவதபோலவும் திருமுறை சொல்வதைக்காண முடிகிறது. எழுதப்படாத சட்டங்கள் கொண்டு மரபு பூண்டு ஒழுகும் முறைப்படி, ஒவ் வொரு பண்ணும் அதற்குரிய இரா கததில் பாடப்பட வேண்டும். திருவாச கம் என்றால்,திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை தவிரமோகனத் திலேயே பாடப்படவேண்டும். குறித்த இரண்டும் காலையில் பூபாளத்தில் பாடப்படும்.

## திருமுறை பற்றிய அறிவு அவசியம்

எமது நாட்டில் குறித்த இலக்கண விருத்தத்தில் பாடல்களை எழுதி அதற்கு பண் குறிப்பிடுகிறார்கள். எம் துர்ப்பாக்கியமே இது. அருளா ளர் தந்த தெய்வத் தமிழ் இருக்க, ஆரவாரிகளின் வெற்றுப் பாடல்க ளுக்கு பண் குறிப்பிட்டால், பின்னோருக்கு இது குழப்பமாக அமையும்.

பண்பாடும் போது எழுத்து, சொல், பொருள், அடி தவறாமல் பக்திக் குப் பங்கம் இல்லாமல் பாடவேண்டும். இதன் பின்னரே இராக, தாள வித் தைகள் அமைய வேண்டும். தமிழ கத்தில் ஆதீனங்கள் முறையாகப் பரீட்சித்து உரிய தகுதி கண்ட பின்னரே பட்டங்களை வழங்குகின் றன. எங்கள் நாட்டு ஆதனங்களும் முறையான தகுதி கண்டு பட்டம் வழங்கவும் நடை முறையில் திரு முறை வளர்க்கவும் முன் வர வேண் டும். பல்கலைக்கழக மட்டத்தில் பண் ணிசை வந்தால் மட்டும் போதாது. திருமுறை பற்றியபோதிய அறிவு வழங்கப்படவேண்டும். இதனை யார் திறம்பட நடாத்துவார்? இன்று பலர் வாயி னால் பேசுகிறார்கள். ஆத்மார்த் தமாக நடைமுறையில் திருமுறைக்கு பணி செய்யாவிட்டால் வாய்ப் பேச் சில் அர்த்தமில்லை.

பதவியில் உள்ளவர்கள், நிறு வனங்கள், அறிஞர்கள் திருமுறை வளர்க்க முன்வர வேண்டும். திரு முறை நூல்கள் பலராலும் போற் றிப் பேணப்பட வேண்டும்.பண்ணி சைப் போட்டியில் பங்கு பெறுவோர் பரிசிற்காக,புகழுக்காக மாணவப் பருவத்தில் மட்டும் பங்கேற்று பின்பு தேடாது விடுவிவது வேதனைக் குரி யது. மானசீகமாகத் திரு முறையை போற்றவேண்டும்.

## பெண்பாலார் பங்கு

பல அம்மன் கோயில்களில் தேர் இழுக்கமுடியும் என்றால் ஏன் திரு முறை பாட முடியாது? என்று பெண் கள் வேகம் கொள்கிறார்கள். தஞ்சைப் பெருவுடையாரில் 400 பெண்களை நடனமாதராக நியமித்த இராஜ ராஜ சோழன் ஓதுவாராக48 பேர் பெட்டி வாசிக்க ஒருவர்மத்தளம் வாசிக்க ஒருவர் என 50 ஆண்களில் திருமுறைப்பணிக்கு நியமித்தமை காண்க. தமிழகத்தில் எத்தலத்திலும் பெண்-ஓதுவாட்டிஇருந்த வரலாறு இல்லை. ஆகம வழிபாட்டில் எங் கேனும் பெண பூசகர் இரு ந்ததாக இல்லை. இதனைப் பெண்கள் நன்கு உணர வேண்டும். தருணத்தில் நடை பெற்ற பல உதாரணங்கள் உள. யாழ்ப்பாணத்திற்கெனப் பண் ணிசைப்பாரம்பரியம் ஒன்று உண்டு. நாவலர் பெருமான் தமிழ் நாட்டில் இருந்து ஓதுவார்களைக் கொணர்ந்து கோயில் மஹோற்சவங்களில் வீதி யில் பாடிய வரலாறுஉண்டு. இந்த வழியில் சங்கர சுப்பையர்,நாகலிங் கம்பரதேசியார்,சைவப் புலவர் கொக்கு வில், குமாரசுவாமிப்பிள்ளை, இசை வல்லார் குப்பிளான் செல்லத்துரை ஆகியோர் திருமுறைக்காக உழைத்த பெரியோர்கள்.மகாதேவ சுவாமிகள், வடிவேல்சுவாமிகள், நல்லைஆதீனம் முதலாவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீசுவாமிநாததேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கொக்குவில் குமாரசிங்கம் எனப் பலர் கதாப்பிரசங்கங்களின் ஊடாகத் திரு முறைவளர்த்தனர்.

எனது குருவும், தகப்பனாரும் ஆகிய தாவடி எஸ்.இராசையா அவர் களின் பல வகுப்புக்கள் ஊடாகவும் கச் சேரிஊடாகவும் திருமுறை வளர்த் தார் என்பது பலருக்கும் தெரியும்

தமிழ் நாட்டின் சிதம்பரம் தமிழ் இசைச் சங்கம் போன்ற பல நிறு வனங்கள் தேவாரப் பாடசாலைகள் மூலமாகவும் விழாக்கள்ஊடாகவும் திருமுறைகளையும் ஓதுவார்களை யும பெருமைப்படுத்துவது காணலாம். இசை விழாக்களில் திருமுறைக்கு முதுமை இடம் தந்து திருமுறை ஆராட்சி மாநாடு,பண் ஆராட்சி மாநாடு முதலிய மாநாடுகளை நடத்துவது காணலாம்.□

## தாச்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தாச்சி சங்க அனுசரணையுடன் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் லீக் முறையிலான தாச்சி சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டு மைதானத்தில் நடை பெறவுள்ளது.

இறுதிநாள் நிகழ்வான இன்றைய தினத்தில் உதயசூரியன் விளை யாட்டுக்கழகமும் சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழகமும் விளையா டவுள்ளது. (உ-10)

## பொலிஸாருக்கு எதிராகஆர்பாட்டப் பேரணி

(கொழும்பு)

கொழும்பு ஊறுகொடவத்தப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை பொதுமக்கள் பொலிஸாருக்கு எதி ராக ஆர்ப்பாட்டப் பேரணி யொன்றை நடத்தினர்.

ஆர்ப்பாட்டப் பேரணியைக் கலைப் பதற்கு பொலிஸார் தடியடி மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டுத்தாக்கு தல்களை மேற்கொண்டனர்.

கிராண்ட்பாஸ் பகுதி வீடொன் றில் சிறுமி ஒருத்தி இனத் தெரியாத நபர்களால் பலவந்தமாகத் தடுத்து வைக்கப்பட்டமை தொடர்பாக பொலி ஸாருக்கு அறிவித்தல் கொடுத்தும் பொலிஸார் எந்தவித நடவடிக்கை களையும் எடுக்காததைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது. இதனால் சில மணிநேரம் போக்கு வரத்துத் தடைப்பட்டிருந்தது. (த)

## யுனிசெவ் அன்பளிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட் டங்களிலுள்ள வைத்தியசாலை களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் யுனிசெவ் நிறுவனத்தினரால், அம்புலன்ஸ் வண்டி மற்றும் கழிவ கற்றும் வண்டிகள் சுகாதார உபகர ணங்கள் அண்மையில் வழங்கப் பட்டுள்ளன.

இந்நிகழ்வில்,யுனிசெவ்நிறுவனத்தின் கொழும்பு அலுவலக அதிகாரி களும் மாகாணப் பிரதி சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (த)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அடைக்கல அன்னை ஆலய பங்கிற்கு உட்பட்ட சேவையிலுள்ள மற்றும் ஓய்வு பெற்ற கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான முக்கிய கலந் துரையாடல் ஒன்றுஎதிர்வரும் 31ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு அடைக்கல அன்னை ஆல யத்தின் ஜெறோம் மண்டபத் தில் நடைபெறவுள்ளது. (உ-55)

## அகவொளியில் திருட்டு

(மண்கும்பான்)

கத்தோலிக்க திருச்சபையின் குரு நகர் அகவொளி நிலையத்தில் கடந்த வாரம் இரு துவிச்சக்கர வண்டிகள் திருட்டுப் போயுள்ளன.

மேற்படி சம்பவம் பற்றி தெரியவரு வதாவது மாலை 4.00 மணியளவில் அகவொளி நிலையத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் பங்கு பற்றிய அருட்சகோதரி மற்றும் யுவதி ஆகியோரது நிலையத்தினுள் பூட்டி வைத்திருந்த துவிச்சக்கர வண்டி களே களவாடப்பட்டுள்ளன.

மேற்படி சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸார் தீவிர விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (உ_55)

## மலர்த் தாவரங்கள் வழங்கல்

(சுதுமலை)

கடந்தகால யுத்த அனர்த்தங் களால்அழிவடைந்த பல இயற்கை மலர்த்தாவரங்களை ஈடுசெய்யும் நோக்கில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட மானிப்பாய் பட்டி னம ஆனைகோட்டை, பண்டத்தரிப்பு நகரம் ,மாதல் கிராமம் ஆகிய உப அலு வலகபிரிவுகளில் உள்ளபொது அமைப் புக்களுக்கு சுமார்ஆயிரம் மலர்த் தாவரங்களை வலி-தென்மேற்குபிர தேசசபை வழங்கவுள்ளது.(உ-252)

## படைமுகாம் அமைப்பு விவகாரம் சங்கரி ,ஜனாதிபதிக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் கேந்திர நிலையங் களை உள்ளடக்கி முகாம் அமைக்கும நடவடிக்கை தொடர்பில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின ரும் தமிழர் விடுதலைக் கூட்டணி யின் தலைவருமான வி.ஆனந்த சங்கரி ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்காகுமாரதுங்க, பிரதமர் ரணில்விக்கிரமசிங்க ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

இது பற்றி இவர்களுக்கு அனுப் பியுள்ள கடிதத்தில் யாழ்.மாநகர சபை மண்டபத்திற்குரிய இடங்க ளில் படையினருக்கான முகாம் அமைக் கும் எண்ணத்தைக் கை விடுமாறு கோரும்படி பொதுமக்களின் பிரதி நிதிகள் என்னைக் கேட்டுள்ளார்கள்.

பழைய நகரமண்டபமும் பல மாநகர சபை அலுவலகங்களும் அப்பிர தேசத்தில் அமைந்திருந்ததை தாங் கள் அறிவீர்கள்.

மீண்டும்அதே இடத்தில் நகர மண்டபம் அமைப்பதற்கு மக்கள் தீர்மானித்துள்ளனர். ஆகையினால் முகாம் அமைப்பதற்கு மாற்று இடத்தை தெரிவு செய்யும்படி படைத் தளபதிக்கு ஆலோசனை கூறுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின் றேன் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. (உ)

அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட

## இலங்கைத் தமிழர்கள் நாடுகடத்தப்படுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட நிலையில் இலங்கைத் தமிழர் ஒருவர் நேற்றுமுன்தினம் ஜேர் மனியில் இருந்து நாடு கடத்தப் பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மடத்தடியைச் சேர்ந்த க.ராஜன் என்பவரே இவ்விதம் நாடுகடத்தப்பட்டவராவார்.

இவர் கடந்த 1996ஆம் ஆண்டு முதல்ஜேர்மனியில் தஞ்சம்புகுந் திருந்தார் எனத்தெரியவருகிறது.

இவருடன் மேலும் இரு யாழ். குடாநாட்டவர் ஜேர்மன் அரசால் நாடு கடத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

இதேவேளை, அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட நிலையில் சுமார் 10 ஆயிரம் இலங்கைத் தமிழர் ஜேர்மனி யல் நாடுகடத்தும் நாளை எண்ணிக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.(உ)

## ஒரு லீற்றர் பெற்றோல் 63ரூ.50சதம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பெற்றோலியகூட்டுத்தாப னம் பெற்றோலின் விலையை லீற்றர் ஒன்றுக்கு 2ரூபாவினால் அதிகரித் ததை அடுத்து, யாழ்.குடாவில்ஒரு லீற்றர் பெற்றோல் 63ரூ.50 சதமாக எரிபொருள் விற்பனை நிலையங்களில்விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (பீ.வ)

## இன்று ஒரு தகவல்

## வறுமையின் விலை

ஒரூரில் இமாம் ஒருவர் துணி வியாபாரம் செய்து கொண்டிருந் தார். பல வெளியு,ர்களிலிருந்தெல்லாம் புதுத்துணிவகைள் அவரின் கடைக்குவரும். புதுப்புது ரகங்களைவரவழைப்பார். விற்பனை செய்வார். இது அவருடைய தொழில். ஒருநாள் அவருடைய கடைக்கு ஒரு வயதான அம்மா வந்தார். ஒரு பழைய பட்டுச்சேலையை எடுத்துக் கொண்டு வந்தார். மிகப்பழையது. அதை இந்த இமாமிடம் காட்டி 'ஐயா... இந்தப் பழைய சேலையை நீங்கள்விலைக்கு வாங்க முடியுமா? என்று கேட்டார். அந்தக் கடையில் வேலை செய்கின்ற ஊழியர் இதை வேடிக்கையாகப் பார்த்தார். 'இந்த அம்மா விபரம் தெரியாமல் இப்படி இங்கே வந்து டேகிறார்களே' என்று. ஆமாம் புதுப்புடவை வியாபாரம் பண்ணுகிறவர்கள் யாராவது பழைய புடவையை விலைக்கு வாங்கு வார்களா? அதுதான் அப்படி வேடிக்கையாகப் பார்த்தார். சரி! இமாம் என்ன சொல்கிறார் பார்க்கலாம் என்று அவரையே கவனித்தார்.

இமாம் அந்த மூதாட்டியை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்தார். அதன் பின'' அம்மா இதற்கு எவ்வளவு தொகை வேண்டும்?" என்று கேட்டார். 'இதற்கு நூற்று இருபது தர்ஹம்வேண்டும் என்றார் அந்த அம்மா. இதைக் கேட்ட இமாம் இலேசாகச் சிரித்துக் கொண்டே தன்னுடைய ஊழியரைப்பார்த்து ''இந்த அம்மாவுக்கு நானூறு தீர்ஹம் கொடுத் தனுப்பு" என்றார். அந்தப் பணியாளருக்கு மிகுந்த ஆச்சரியம். என்ன இது... அந்த அம்மா பழைய புடவையைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு நூற்றிஇருபது தீர்ஹம் வேண்டும் என்று கேட்கிறார். இவர் நானூறு தீர்ஹம் கொடுத்தனுப்பு என்கிறார். ஒன்றும் புரியவில்லையே என்று யோசித்துக் கொண்டே என்ன சொன்னீர்கள் என்பது மாதிரி மறுபடியும் இமாமைப் பார்த்தார். ஆமாம்! அவருக்கு நானூறு தீர்ஹம் கொடுத் தனுப்பு என்கிறார் அவர்.

இவர் மெதுவாகக் கேட்கிறார். ''ஏன் இதற்கு இவ்வளவு அதிக விலை கொடுக்க வேண்டும்?" என்று. அந்தப் பழைய புடவையைப் பார்த்துக் கொண்டே அந்த இமாம ''பேசாமல் நான் சொன்னபடியே செய். போ! நீ அந்த துணியைப் பார்க்கிறாய். நான் அந்த ஏழையின் வறுமையைப் பார்க்கிறேன்." என்று சொன்னார். அதன் பின்னர் அந்த ஊழியர் மறுவார்த்தை பேசவே இல்லை.

பணத்தைக் கொண்டு வந்துஅந்த அம்மாவிடம் கொடுத்து விட்டார். அந்த அம்மாவின் மனம் நிறைந்தது. வறுமைக்கு விலையேது. அது எல்லாருக்கும் புரியாது, பெரியவர்களுக்குத்தான் புரியும். அது புரிந்ததனால் தான் அந்தப் பெரியவர் அப்படி நடந்து கொண்டார். நற்பண்புகள் யாவை என்று நபிகள் நாயகத்திடம் கேட்டார்களாம். அதற்கு அவர் சொன்ன பதில் என்ன தெரியுமா? 'ஒற்றுமையோடு இருப்பது, நல்ல காரியங்களைச் செய்வது, தர்மம் புரிவது, சலாம் சொல்ல முந்திக் கொள்வது, நோயாளியைச் சென்று காண்பது, நல்லவரா, கெட்டவரா என்று பாராமல் பிரேத ஊர்வலத்தில் கலந்து கொள்வது, முஸ்லிமா முஸ்லிம் அல்லாதவரா என்று பாராமல் அயலாருடன் அன்புடன் நடந்து கொள்வது, முதியோர்களுக்கு மரியாதை செய்வது, மன்னிப்பது, சண்டை சச்சரவுகளை தீர்த்து வைப்பது, கோபத்தை அடக்குவது, விலக்கப் பட்டதை தவிர்ப்பது, உறவினர்களிடம் அன்பாய் நடந்து கொள்வது, கர்வம் கொள்ளாமல் இருப்பது ' போன்றவைகள் தான் நற்பண்புகள் என்றார் நபிகள் நாயகம். இப்படிப்பட்ட நற்பண்புகளில் ஒன்றுதான் , இமாம் அந்த மூதாட்டிக்குச் செய்த உதவி.

நமக்கு வேண்டியவாகளில் இப்படிப்பட்ட பண்பாளர்களைப் பார்ப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. நமக்கு வேண்டிய ஒரு கடைக்காரர். அவர் கடையில் இல்லாத நேரம பார்த்து ஒருவன் வந்தான். வேலைக் காரப் பையனைப் பார்த்து, ஒரு கோழி இருக்கிறது. விலைக்கு வாங்கிக் கொள்கிறீர்களா? என்று கேட்டிருக்கிறான். எவ்வளவு என்று கேட்டிருக்கிறான் அவன். பத்து ரூபாதான் என்றான் இவன். விலை மிகவும் மலிவாக- இருக்கிறது என்று நினைத்துக் கொண்டே சரி கோழி யைக் கொடு என்று சொல்லியிருக்கிறான். அவன் உடனே ஒரு கடதாசியைப் பையிலிருந்து எடுத்துக் கொடுத்திருக்கிறான். அவன் கோழி எங்கே என்றான். இவன் அந்தத் தாளில் போட்டிருக்கிறது, சரி இந்தா பத்து பேர் என்று சீட்டைக் கொடுத்தான். இவன் அதை வாங்கிப் பார்த்தான். அதில் பத்து ரூபா என்று எழுதியிருந்தது. பேசாமல் வாங்கிக் கொண்டு போய்விட்டான்.

இது நடந்து கொஞ்ச நேரம் கழித்து அந்தக் கடைமுதலாளி திரும்பி வந்தார். கடையிலிருந்த பையன் நடந்த விபரத்தைச் சொன்னான். கடைசியில் நானும் ஒரு சீட்டில் பத்து ரூபா என்று எழுதிக் கொடுத்து அனுப்பி விட்டேன் என்றான். இதைக் கேட்டதும் அந்தக் கடைக்காரர் பளார் என்று பையனை அறைந்து விட்டார். அவனுக்கு ஒன்றும் புரிய வில்லை. முதலாளி ''நான் என்ன தப்பு பண்ணினேன் என்றான். பத்து ரூபா என்று ஏனடா சீட்டில் எழுதிக் கொடுத்தாய்? இப்பொழுது அந்தச்சீட்டு வீணாகி விட்டதே! அதை வாயாலே சொல்லியிருக்க லாமேயடா என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## விடுதலைப்போரில் பெண்களின் பங்கை புறந்தள்ளி விடமுடியாது

### தமிழினி தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

நாம் இப்போது உயர்ந்த விடுத லைப் போராட்டம் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கின்றோம். இந்தப் போராட்டத்தில் சம பங்கினை பெண்ணி னம் ஏற்றுக்கொண்டிருப்பது மிகவும் பெருமைக்குரிய விடயம் என்று பெண்களின் பங்கை புறந்தள்ளி விட முடியாது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி தெரிவித் துள்ளார்.

மட்டக்களப்பு கல்லடி விபுலாநந்த இசை நடனக்கல்லூரியில் நடை பெற்ற தமிழ் தேசிய பெண்கள் மாநாட்டில் ஆரம்ப நாளன்று உரை யாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெருமளவு பெண்கள் திரண்டி ருந்த இந்தப் பெண்கள் மாநாட்டில் தமிழினி மேலும் பேசுகையில்,

எமது மண்ணை மீட்டெடுப்போம் என்ற உறுதிப்பாட்டை எமக்குள் நாம் ஏற்படுத்தி வருகிறோம். அவ்வாறு நாம் மீட்டெடுக்கும் மண்ணில் நாம் சுதந்திரமாக வாழ வேண்டும் என்றார்.

மட்டக்களப்பில் நேற்று மாலை நடைபெற்ற தமிழீழ தேசியப் பெண்கள் மாநாட்டில் பெருந்திரளான பெண்கள் கலந்து கொண்டனர்.

மாநாடு ஆரம்பமாகுமுன் மட்டக் களப்பு செபஸ்தியார் கோவில் சந்திகளில் இருந்து பெண்கள் பெரு மளவில் திரண்டு எழுச்சிப் பேரணி ஒன்றை நடத்தியிருந்தனர்.

இப்பேரணியில் மன்னார், வவுனி யா, முல்லைத்தீவு,கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மற்றும் தென் தமிழீ ழத்தில் இருந்தும் பெருமளவான பெண்கள் கலந்து கொண்டனர்.(வ)

## அரசின் நிலைப்பாட்டால் போராளிகளின் நிலைப்பாடு கேள்விக்குறியாகியுள்ளது

### நல்லூர்க் கோட்டப் பொறுப்பாளர்

(குருநகர் நிருபர்)

''40ஆயிரம் இராணுவம் சூழ்ந்துள்ள குடாநாட்டில் 450 போராளிகள் மட்டுமே அரசியல் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். அரசின் இரட்டைத் தன்மையான போக்கால் இங்கே தங்கியுள்ள போராளிகனின் நிலைப்பாடு கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது.

இவ்வாறு தெரிவித்தார். யாழ். நல்லூர் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன்.

கடந்த புதன்கிழமை பிற்பகல் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் அரசியல் துறையில் யாழ். மாவட்டச் சிகை ஒப்பனையா ளர்களுக்கு விசேட கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதில் கலந்து பேசுகையிலேயே பொ.ஈஸ்வரன் மேற்கண்ட விதம் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:

சமீபத்தில் நாங்கள் வன்னிக்கு அழைக்கப்பட்ட விடயம் பெரிதாகப் பேசப்பட்டது. போனதும் வந்ததும் உண்மைதான் எனினும் நாங்கள் எந்தக் கட்டத்திலும் எமது மக்களை விட்டுப் போனது கிடையாது.

1995ஆம் ஆண்டு இராணுவம் யாழ்.மண்ணை முற்றுகை இட்டி ருந்த போதும் தலைவரால் நேரடிப் பயிற்சியில் உருவாக்கப்பட்ட 150 பேரைக் கொண்ட சிறுத்தைப் படை இங்கே தங்கித்தான் இருந்தது.

அந்த 150 போராளிகளில் ஒரே யொரு போராளி தான் உயிரோடு இருந்தார். அவ்வாறு எங்களுக்கு கேள்விக்குறியாக அமைந்த காலங் களிலும் நாங்கள் எமது மக்களை விட்டு முற்று முழுதாகச் சென்ற தில்லை இவ்விதம் அவர் கூறினார்.

கலந்துரையாடலுக்குத் தலைமை வகித்த யாழ்.மாவட்ட சிகை ஒப்ப னையாளர் சங்கத் தலைவர் க.ஸ்ரீராஜன் கூறியதாவது,

''அன்னை பூபதி தமிழினத்திற் காக 15 வருடங்களிற்கு முன்பாக இந்திய அமைதிப்படைக்கு எதிராய் இரு அம்சக் கோரிக்கையான யுத்தத்தை உடனடியாக நிறுத்து, விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்து என்பனவற்றை முன்வைத்து ஏறத் தாழ ஒருமாத காலம் உண்ணா நோன்பினை நோர்த்து தமது இன்னு யிரை ஆகுதியாக்கிக் கொண்ட மகத்தான தியாகி என்றார்.(பி-74)

## போர் நிறுத்த உடன்படிக்கையை படையினர் மதித்து நடக்கவில்லை

### தமிழ்க் கார்டியன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

போர் நிறுத்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டவாறு படையினர் போர் சமநிலையை பேணவில்லை என தமிழ்க்கார்டியன் பத்திரிகை தனது ஆசிரியத் தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

இருதரப்பினரும் படைச்சமநிலை யை கடைப்பிடித்து நாட்டின் பாது காப்புக் கருதி இவ்வாறான செயல் களை தடுக்க வேண்டும்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டவற்றை இராணுவத் தினர் மதிக்காது செயற்படுகின்றனர்.

தவிரவும், இலங்கை இராணுவத்தி னர் கடல்,தரை,வான் படைகளை நவீனமயப்படுத்துவதில் கவனம் செலுத்தி வருகின்றனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வினாலும், தமிழீழவிடுதலைப் புலி களின் தலைவர் வே.பிரபாகரனி னாலும் செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பாதகமாகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஆனாலும், தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் நீரோட்டத்தில் கலந்து தமிழ் மக்களுக்கான உரிமை களை வென்றெடுப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

புலிகளின் இவ்வாறான மனப் போக்கை கவனியாது, இராணு வத்தினர் போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது கண்டிக்கத்தக்கது எனவும் அப்பத்திரிகையின் ஆசிரிய தலையங்கத்தில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-8)

### இராசி பலன்

**29.03.2003**
**(பங்குனி 15,சனி)**

| | |
|---|---|
| துவாதசி | மு.ப.9.59வரை |
| அவிட்டம் | மா. 6.02 வரை |
| இராகுகாலம் | 9.13-10.43 |
| சுபநேரம் | 3.13-4.43 |

சித்தாமிர்தம்

**மேடம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய அனு கூலம், குடும்பத்தில் மகிழ்ச்சி, தனலாபம்.

**இடபம்**
நல்லசம்பவம், தூரதேசச் செய்தி, இஷ்ட சித்தி, பெரியோரால் மதிக்கப்படுதல்.

**மிதுனம்**
மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், கட்டுப் பாடு, நிலைமாற்றம்.

**கடகம்**
தர்மம், எதிர்பாராத பிரச்சினை, பயம், உடல்வியாதி.

**சிங்கம்**
சௌக்கிய விருத்தி, காரிய அனுகூலம், திடீர் பயம், குடும்பமகிழ்ச்சி.

**கன்னி**
நண்பர்கள் உதவி, உடல்நலம், விருந்துப சாரம், முயற்சிகைகூடும்.

**துலாம்**
சிறுவியாதி, தாழ்ந்த சுபாவம், தொழில் நன்மை, குடும்பக்கவலை.

**விருச்சிகம்**
உடல்நலக்குறைவு, மாதாசுகம், மனப் பதற்றம், புதிய விடயம் அறிதல்.

**தனுசு**
பிரயாண நன்மை, காரியஜெயம், உறவினர் உதவி, புதியபொருள் சேர்க்கை.

**மகரம்**
முயற்சி மந்தம்,உத்தியோக நன்மை, கடுமையான வார்த்தை, தனவிரயம்.

**கும்பம்**
ஜனவசியம், பொருள் சேர்க்கை, குடும்பத் தில் நல்ல சம்பவம், சயனசுகம்.

**மீனம்**
உஷ்ணரோகம், காரிய தாமதம், மனக் கிலேசம், அதிக செலவு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்.

## தற்போதைய தேர்தல் முறையில் மாற்றம் பற்றி ஆலோசனை

(கொழும்பு)

தற்போது நடைமுறையில் உள்ள தேர்தல் முறையில் திருத்தங்கள் கொண்டுவருவது தொடர்பாக கட்சி களின் தலைமைத்துவங்கள் மட்டத் தில் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இவ்விடயம் தொடர் பாக பல சுற்றுப்பேச்சு வார்த்தை கள் நடைபெற்றதாக அரசாங்கத் தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்ட விதிகளில் எவ்வகை யான திருத்தங்கள் கொண்டு வரப்படவேண்டும் போன்ற விடயங் களே கட்சிகளின் தலைமைத்துவ மட்டத்தில் ஆராயப்படுகிறது.

இதேவேளை எதிர்க்கட்சிகள் இதற்கான பாராளுமன்ற பிரேரணை ஒன்றை நியமிப்பதற்கான தெரிவுக் குழுவை அமைக்கவுள்ளன.(பி-8)

## திருத்தச் சட்ட மூலங்கள் நான்கிற்கு அங்கீகாரம்

(கொழும்பு)

அமைச்சரவையினால் அங்கீகரிக் கப்பட்ட 4 திருத்தச் சட்டமூலங்கள் எதிர்வரும் ஜூன் மாதத்திற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

தொழிலாளர் இழப்பீட்டு ஊழியர் சேமலாப நிதி சம்பள வேதனம் சாய்ப்புத் திருத்தச்சட்ட மூலங்களே சமர்பிக்கப்படவுள்ளதாக தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரி வித்துள்ளார்.

சாய்ப்புத் திருத்தச் சட்டமூலத் தின் பிரகாரம் தொழில் அமைச்சர் விரும்பினால் இரவு 10 மணிக்கு மேலும் அலுவலகங்கள் வர்த்தக நிலையங்களை திறந்து வைக்க முடியும்

சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வு பெற்றுச் செல்லும் ஊழியர்கள் சேமலாப நிதியைப் பெற்றுச் செல்ல முடியும். (உ-8)

## மலையகத்தில் தமிழ் மாணவர் சிங்களம் படிக்கும் அவல நிலை

(கொழும்பு)

பெரும்பாலான மலையகப் பகுதி களில் தமிழ்ப் பாடசாலைகள் இல்லாத காரணத்தால் அப்பகுதி மாணவர் கள் சிங்கள மொழிகளில் கல்வி கற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு பெருந்தோட்ட உட்கட் டமைப்பு அமைச்சர் பெ.சந்திரசேகரன் இராகவ தமிழ் மகாவித்தியால யத்தில் சிறுவர் பூங்காவை திறந்து வைத்து உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

அந்நிகழ்வில் தொடர்ந்து பேசிய அமைச்சர், இந்த நிலைமைக்கு வெகு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதற்கு இப்பிரதேசங்களைச் சேர்ந்த பெற்றோர்கள், மாணவர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். (பி-8)

முறைப்படச் சூழ்ந்தும் முடி விலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர்
-குறள்-

வலம்புரி

## படு பாதாளத்தில் அரச வண்டி

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலம் 2000ஆம் ஆண்டு பொதுத் தேர்தலோடு போக,பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆட்சிக் கட்டிலில்அமர்ந்துகொண்டது. 'சமாதானம்' என்ற கோஷத்தோடு ஆட்சிப் பீடமேறிய ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருப்பது சீரான செயற்பாட்டிற்கு சிறு தடையாக இருப்பினும் முழு அமைச்சுக்களையும் தனது பொறுப்பில் வைத்திருக்கும் ஐக்கிய தேசிய முன்னணிக்கு அத்தடையை வெற்றி கொள்வதில் பெரிதாக இடைஞ்சல்கள் இருப்பதற்கு நியாயமில்லை. ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆட்சிப் பீடமேறிய கையோடு அரசும் விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்தம் செய்து கொண்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் அமுல்படுத்தினர். இதன் காரணமாக யுத்தத்திற்காக செலவிட்ட கோடிக் கணக்கான ரூபாய்கள் மீதப் படுத்தப்பட்டன.

வளர்முக நாடாகிய இலங்கையின் தாங்க முடியாத யுத்த செலவு நாட்டையே குட்டிச் சுவராக்கியது. -எனினும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் யுத்த செலவுகளுக்கும்,மனித அழிவுகளுக்கும் முற்றுப் புள்ளி வைத்தது.

மீதப்படுத்தப்படும் யுத்தச் செலவு நாட்டின் அபிவிருத்தி நோக்கிய திட்டங்கள்,வேலை வாய்ப்புக்கள் நிவாரணப் பணிகள் விலைக் குறைப்புக்கள் என்பவற்றுக்காக பயன்படுத்த முடியுமெனக் கருதப் பட்டது. ஆனால் எதிர்பார்த்ததற்கு மாறாக யுத்தம் நடந்த போது நாட்டில் இருந்த அபிவிருத்தித் திட்டங்கள் வேலை வாய்ப்புக்கள் கூட இப்போது இல்லை என்றே கூற வேண்டும்.

பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் அரச நியமனங்கள் வழங்கப் பட்டன என்பதை மறுத்து விட முடியாது.பொது ஜன ஐக்கிய முன்னணி என்பதற்காக அவ்வரசு முடித்த சில முக்கிய விடயங்களை தணிக்கை செய்வது தர்மத்திற்கு உகந்தது அல்ல.அவ்வகையில் பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் வழங்கப் பட்ட வேலை வாய்ப்புக்களோடு ஒப்படும் போது ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சியில் வழங்கப்பட்ட வேலை வாய்ப்புக்களின் அளவு பூச்சிய மட்டத்தில்இருந்துசிறிதேனும் உயர்ந்ததாகத் தெரியவில்லை.

மாறாக எரிபொருட்களின் விலை மாதத்திற்கு ஒரு தடவை என்ற நிலை மாறிஇப்போது வாரத்திற்குஒருதடவைஅதிகரிப்புச் செய்தல் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு 'இன்று போய்நாளை வா' என்பதாக இருப்பதால்தென்னிலங்கையில்அரச தனியார் ஊழியர்களின் ஆர்ப்பாட்டங்களும்,பேரணிகளும் ஆரம்பித்து விட்டன. இவை அரசு பாதாளத்தில் சென்று கொண்டிருப்பதையே காட்டுகின்றது.

# கூட்டுப்படை எதிர்பார்த்தது ஒன்று!

# ஆனால் நடந்திருப்பது வேறொன்று!

நாட்டை விட்டு சதாம் ஹுசைனும் அவரது மகன்மார் இருவரும் வெளியேறிவிட வேண்டும் என்று முதலில் அறிவித்த அமெரிக்க அதிபர் பின்னர் 48 மணித்தியாலத்திற்குள் என்று கெடுவும் விதித்தார்.

இந்த வெருட்டுதலை சதாம் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை.

"என்னை வெளியேறச் சொல்ல நீ யார் உனக்கு இந்த அதிகாரத்தைத் தந்தவர் யார்" என்று சதாம் கேள்வியும் எழுப்பினார்.

கெடு முடிந்தது. அமெரிக்கா தலைமையில் ஆக்கிரமிப்பு ஆரம்பித்தது.

பக்தாத் மீது போடு போடு என்று குண்டுகளைப் போட்டார்கள். விமானக் குண்டு வீச்சு என்ன ஏவுகணை பாய்ச்சல் என்ன விண்ணை மட்டுமன்றி ஈராக் முழுவதையுமே அது அதிரவைத்தது.

ஈராக் அதிபரின் மாளிகைகள் அதுபோன்ற பெரிய கட்டடங்கள் எல்லாம் தவிடு பொடியாக்கப் பட்டன. முதல் நாளில் மட்டும் 3000 குண்டுகள் பக்தாத் மீது வீசப்பட்டன.கூட்டுப்படைகளின் ஏனைய பிரிவுகளும் சேர்ந்து கொண்டன.

அதிபர் புஷ் எதிர்பார்த்த மாதிரியில் ஈராக்கின் எந்தப் பகுதியிலிருந்தும் இரசாயன ஆயுதங்கள் வெளிவரவில்லை. அவ்வாறு வெளிவந்திருந்தால் அவை எங்கிருந்து வீசப்படுகின்றன என்பதை வெகு இலகுவாக மேலே பறந்து கொண்டிருக்கும் வேவு விமானங்கள் மூலம் கண்டு பிடித்திருக்கலாம். கண்டு பிடித்திருந்தால் அந்த இடங்களை அச்சொட்டாகத் தாக்கி நிர்மூலமாக்கியிருக்கலாம்.

அவ்வாறு செய்திருந்தால் அந்த இரசாயன உயிரி ஆயுதங்கசிவுகள் ஈராக்கிய மக்களையும் இராணுவத்தையும் பாதிக்கும். அதனால் கூட்டுப் படைகளுக்கு இலாபமாகவிருந்திருக்கும்.

"பார்த்தீர்களா? இதைத்தான் அப்போதே கூறினேன்" புஷ் அங்கிள் இவ்வாறு பறைசாற்றியிருப்பார்- நடக்கவில்லை.

சதாம் ஹுசைன் இலேசுபட்டவர் அல்லவென்று முன்பொருதடவை எழுதியிருந்தேன். அதை அவர் நிரூபித்து விட்டார்.

இளம் வயதிலேயே (42வயதில்) பதவிக்கு வந்தவர்.பல போராட்டங்களைக் கண்டவர்.ஈரானோடு, ஈராக்கோடு,இஸ்ரேலோடு சவுதி அரேபியாவோடு எல்லாம் அவ்வப்போது மோதி போர் அனுபவம் பெற்றவர். அமெரிக்காவின் போர்த்தந்திரம் அறியாதவராய் இருக்க முடியாது.

உயிரி, இராசாயன ஆயுதங்கள் உண்மையாகவே அவரிடமிருந்தாலும் அவ்வளவு எளிதாக பிடிபடுவதற்கு இடந்தருவார் என்று எதிர் பார்க்க முடியாது. அவை அவ்வாறு இருந்தாலும் எதிரிகள் மீது பயன் படுத்துவாரேயன்றி உள்நாட்டில் கசிய விட்டு தனது மக்கள் பாதிக்கப்படுவதை விரும்பார். அவ்வாறு நிகழின் பொதுமக்களே இன்னும் அதிகமாக அவரை வெறுப்பார்கள். எதிரிகள் என்னும் போது தன்னை எதிர்ப்பவர்கள் எல்லாம் அவருக்கு எதிரிகள் தாம். ஈராக்கிய வட பகுதியில் புரட்சியிலீடுபட்ட குர்திஷ் கிராமமொன்றையே இரசாயன ஆயுதங்களைக் கொண்டு அழித்தவர் என்பது அவர் மீதான மேற்கத்தைய குற்றச்சாட்டு.

அதிபர் புஷ்ஷைப் பொறுத்த வரை உள்நாட்டு மக்களாலேயே சதாம் வெறுக்கப்படுகிறார். அவர் அவர்களை அடிமைகளாக அடக்கி ஆள்கிறார். அந்த மக்களை விடுவிப்பதே இத்தாக்குதலின் நோக்கம்.

ஆனால் போரின் போக்கும் நிலைமையும் வேறு விதமாகவிருக்கின்றது.

முதல் சில தினங்களில் உயிரி, இரசாயன ஆயுதங்கள் வெளிப்படும் என்று எதிர்பார்த்து கூட்டுப் படையினர் ஆக்ஸிஜன் முகமூடிகளை அணிந்து கொண்டு முன்னேறினார்கள். ஆனால் அவ்வாறு எதுவித ஆயுதமும் வெளிப்படவில்லை. குவைத் மீதுதான் ஸ்கட் ஏவுகணைகள் செலுத்தப்பட்டன. அவைகளில் சிலவற்றை பேட்ரியட் மூலம் வானத்திலேயே கூட்டுப்படையினர் அழித்தனர்.

### இரசாயன ஆயுதகூடம்

ஆளில்லாத வேவு விமானம் ஒன்றும் வீழ்த்தப்பட்டது. அம்மாதிரி விமானங்கள் மூலம் தான் இரசாயன ஆயுதங்களும் செலுத்தப்படும் என்று அஞ்சப்பட்டது.

ஆனால் போர் மும்முரமுற்ற பிறகும் இரசாயன ஆயுதங்கள் காணப்படவில்லை.

ஆனால் ஓர் இடத்தில் இரசாயன ஆயுத உற்பத்தி நிலையம் மட்டும் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது . அதன் விபரம் வெளியிடப்படவில்லை. பக்தாத் மீது மூர்க்கத்தனமான விமான ஏவுகணைத்தாக்குதல்களை நடத்திய தன் மூலம் ஈராக்கிய படைகள் கலங்கிப் போய் சரணடைவார்கள். சதாம் தப்பியோட முயல்வார் என்றெல்லாம் கூட்டுப்படை தலைமையை எதிர் பார்த்திருக்கக்கூடும். அப்படி பெரிதாக ஒன்றும் நடக்கவில்லை.

ஆரம்பத்தில் 51வது படையணி சரணடைந்ததாக அறிவிக்கப்பட்டது. சதாம் ஹுசைன் காயமுற்று இரத்தம் ஏற்றப்படும் நிலை ஏற்பட்டிருப்பதாக புலனாய்வுத் தகவல் கிடைத்ததாக பிரி. பிரதமர் ரொனிபிளேயர் கூறினார்.

### சதாம் நிகழ்த்திய உரை

சதாம் காயமடையவில்லை. அவர் அந்த செய்திவந்த் அடுத்த சில மணி நேரத்திலேயே ஈராக் தொலைக்காட்சியில் தோன்றி உரையாற்றினார். அதில் ஒரு பகுதி வருமாறு,

ஓ பெருங்குடி மக்களே ஓ எமது வீரமிக்க ஆயுதப் படைகளின் தீர மிக்க போராளிகளே! உங்களுக்கு அமைதி கிட்டுவதாக!

நாம் அறிவோம். இந்தத் துணிச்சல் மிக்க, பொறுமையான நேர்மையான வீரமிக்க தேசத்திலுள்ள எல்லோரும் அறிவார்கள்; எது சரியோ அதனைச் செய்வதற்கு நாம் எவ்வளவு தூரம் முயன்றோம் என்பதை.அவ்வாறே உள்நோக்கம் கொண்டவர்களால் ஏற்படுத்தப்பட்ட துன்பங்கள் குறித்து நாம் எவ்வளவு பெருந்தன்மையோடு பொறுத்துக் கொண்டோம். இது பற்றிச் சிலர் எம்மை குற்றம் காணவும் செய்தார்கள் பலவீனமானவர்களது எண்ணத்துக்கு இந்த நிலைமை இசைவாக இருக்கலாம், சபிக்கப்பட்ட லியோனிஸத்தினால் ஆட்கொள்ளப்பட்டுள்ள பிரிட்டிஷ் அமெரிக்க நோக்கங்களையும் எண்ணங்களையும் அறியாதவர்கள் இவர்கள்.

தற்பொழுது சில தீர்மானங்களை எடுக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். இதில் எமது போராளிகளும் ஈராக்கிய பெருமக்களும் சிறப்பாக செயல்படுகிறார்கள். அதற்காகக் கடவுளிடமிருந்து வெற்றியும் திருப்தியும் கிடைக்க வேண்டும். ஏனென்றால் இறைவன் தனக்கும் மனித குலத்துக்கும் எதிரானவர்களை எதிர்க்கும் விசுவாசிகளுக்கு அவர் வாக்குறுதியளித்துள்ளார்.

துன்மார்க்கர்களின் குற்றச்சாட்டுக்களைப் பொறுத்துக் கொண்டு நியாயமற்ற அவர்களின் கோரிக்கைகளையும் நிறைவேற்றியுள்ளோம். உலகம் விழிப்படையும் எமது மக்கள் மீதான பொருளாதாரத் தடைகள் நீக்கப்படும் அதன் மூலம் யுத்தம் தவிர்க்கப்படும் என்றும் நாம் நம்பினோம்.

சகோதரர்களே! எமது நாட்டின் கொள்கை துன்மார்க்கத்தை எதிர்ப்பதாகும். ஆனால் துன்மார்க்கமானது ஏமாற்றுகளையும் அழிவுகளையும் தரித்துக் கொண்டு வருமானால் நாம் அதனை நம்பிக்கையோடு புனித யுத்தத்தின் மூலம் எதிர் கொள்ள வேண்டும். அது எமக்கு கௌரவத்தையும் இறைவனுக்கு திருப்தியையும் கொடுக்க வேண்டும்.

"துணிச்சல் மிக்க போராளிகளே! உங்கள் பலமெல்லாம் கொண்டு எதிரிகளைத் தாக்குங்கள். ஈராக்கியர்களே புனித யுத்தத்தின் உணர்வோடு சண்டையிடுங்கள். அவர்கள் மேலும் தொடராத நிலைக்குத் தள்ளிவிடுங்கள்.

என்று தமது உணர்ச்சி மிக்க உரையில் தெரிவித்திருந்தார்.

இந்த உரையின் பின்னர் தான் ஈராக்கிய படைகள் பல முனைகளிலும் அதி உக்கிரமாகப் போராடத் தொடங்கியிருப்பதாக செய்திகள் வந்தன. சில இடங்களில் கூட்டுப் படைகளுக்கு பலத்த பின்னடைவு திரும்பி ஓடவேண்டியும் ஏற்பட்டது.

### உணவு தண்ணீர் பஞ்சம்

ஈராக்கில் தண்ணீருக்கு சாதாரண நாட்களிலேயே தட்டுப்பாடு. சண்டை தொடங்கியதின் பின் நிலைமை மோசமடைந்தது.

ஈராக்கிய அதிகாரிகள் தமது படைகளின் நீடித்த தேவைகளுக்கு தண்ணீரையே முடக்கிவிட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. அதேசமயம் கூட்டுப்படைகளுக்கும் தண்ணீர் வசதிகள் சிக்கிவிடக்கூடாதென்ற நிலை.

முன்னேறியுள்ள படைகளிடம் ஈராக்கிய பொதுமக்கள் தண்ணீருக்காகவும் உணவுக்காகவும் வந்து நிற்கிறார்கள்.

இதற்கிடையில் மனிதாபிமான வேலைகளை மீண்டும் ஆரம்பிக்க ஐ.நா.பொதுச் செயலாளர் கோபி அனான் ஆலோசித்து வருகிறார்.

கூட்டுப்படைகளின் உணவு தண்ணீ மனிதாபிமான உதவிகளும் ஈராக் நோக்கி குவைத்திலிருந்து புறப்பட்டுள்ளன.

போர் முறையில் தவறுகள் ஏற்பட்டு விட்டதாகவும் வளங்கள் போதவில்லையென்றும் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் றொனால் ரம்ஸ் பீல்ட் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

போதிய ஆளணிகள் போர் முனைக்கு அனுப்பப்படவில்லையென்ற குற்றச்சாட்டையடுத்து மேற்கொண்டும் ஆயிரக்கணக்கான போர் வீரர்கள் ஈராக் நோக்கி அனுப்பப்படவிருக்கிறார்கள்.

போர் நிலைகள் பற்றி நேற்று முன்தினம் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷை காம்ப்டேவிட்டில் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

பின்னர் பத்திரிகையாளர்களுடன் பேசிய அதிபர் புஷ் யுத்தம் நாளுக்கு நாள்மெதுவாக ஆனால் உண்மையாக முன்னேறி வருகின்றது என்றார்.

எந்தக் காரணத்தைக் கொண்டும் யுத்தம் கைவிடப்படமாட்டாது என்று ரொனிபிளேயர் கூறினார்.

யுத்தத்தை உடனடியாக முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என சீனா, ரஷ்யா, இந்தியா போன்ற நாடுகள் ஐ.நா பாதுகாப்புச் சபையில் கோரிக்கை விடுத்துள்ளன.

ஈராக்கிய தூதுவர் பாதுகாப்பு சபையில் பேசியபோது போருக்கு முடிவு கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

போரை ஆரம்பித்த அமெரிக்கா தனது கை ஓரளவுக்காவது உயர்ந்தால் அல்லாமல் நிறுத்துவது பற்றி ஆலோசிக்காது என்பதுதிண்ணம் எனவே ஐ.நா.வின் முயற்சிகள் பலனளிக்க இன்னும் நாட்கள் செல்லும் என்றே கருதலாம்.(பி)

# தொழிற்சங்கங்கள் இணைந்து கூட்டமைப்பு உதயம்

(கொழும்பு)

நூற்றுக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து ஐக்கிய இலங்கைத் தொழிலாளர் உரிமைகளை பாதுகாக்கும் தொழிற் சங்கக் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளன.

இக்கூட்டமைப்பில் எதிர்க் கட்சிகளில் அங்கம் வகிக்கும் பல தொழிற்சங்கள் ஒன்றிணைந்திருப்பதாக ஐக்கிய இலங்கை தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய செயற்திட்டம் ஒன்றை இக்கூட்டமைப்பு உருவாக்கியுள்ளது.

இக்கூட்டமைப்பு அரசின் தனியார்மயமாக்கலை எதிர்க்கும் நடவடிக்கைகளிலும் ஜனநாயகத்தை கட்டிக்காகும் முயற்சிகளிலும் ஈடுபடவுள்ளது. (உ-8)

## தினசரி தியானம்

### எண்ணம்

ஒவ்வொரு செயலுக்கும் பின்னே அதன் அடிப்படையான எண்ணம் இருக்கிறது. நீ கெட்ட எண்ணங்களைக் கொண்டால் கெட்ட செய்கைகளையே புரிவாய். அறிவு கொள். பாகுபடுத்து. எண்ணங்களையும் ஆசைகளையும் கட்டுப்படுத்து. உன் எண்ணங்களை ஊன்றிப் பார். மனதில் கெட்ட எண்ணம் ஒன்றும் நுழைய அனுமதியாதே. ஆத்மஞானம் பெற ஆசைகொள். நீ பிறவிப்பயனை அடைவாய்.

சுவாமி சிவானந்தர்

## தவக்கால நற்சிந்தனை

### "பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்!"

இரு வானதூதர்கள் ஒரு மலை உச்சியிலே வந்து அமர்ந்து, இயற்கை அழகை ரசித்துக் கொண்டிருந்தனர். அப்போது சிறகுகளைக் கொண்ட சில அழகான வினோதமான தோற்றத்தையுடைய பல வானத்தை நோக்கி சென்று கொண்டிருந்தன.அவற்றுள் சில மோசமான தோற்றத்தில் காணப்பட்டன. இது என்னவாக இருக்கும் என ஒருவருக்கொருவர் பேசி, இவை மக்களுடைய பல்வேறு செபங்கள் இறைவனிடம் செல்கின்றன என்பதை உணர்ந்து அவற்றை பின் தொடர்ந்து சென்றனர். செல்லும் வழியில் மோசமான தோற்றத்தையுடையவை மேலும் பறந்து செல்ல முடியாமல் செத்து கீழே விழுந்து கொண்டிருந்தன. பரலோகத்தின் வாயிலருகே எல்லோரையும் கவரும் அளவுக்கு மிக அழகிய தோற்றத்தையுடைய ஒன்று காணப்பட்டது. வானதூதர்கள் உள்ளே சென்று பார்த்தபோது அரியணையிலிருந்தவரிடம் சிறகுகளையுடைய ஒவ்வொன்றாகத் தன் வேண்டுதல்களை "ஆண்டவரே! ஏழைகளுக்கு உணவு வழங்கும் என சமர்ப்பிக்க, அப்படியே ஆகட்டும் என்றார் ஆண்டவரே!இறுதியாக தூதர்கள் வாயிலருகே பார்த்த ஒப்பற்ற விதத்தில் அழகையுடையது வந்து பணிந்து இறைவா! நான் உம் பார்வையில் தகுதியற்றவன். இருப்பினும் என்னை அன்பு செய்வதற்கு நன்றி. என் மீது இரங்கியருளும் என்றது. விண்ணகத்தில் எல்லோரும் ஆர்ப்பரித்து மகிழ்ந்தனர். பரிசேயன் வரிதண்டு பவனின் செபம் செய்யும் உவமையில் இயேசு கூறுவதும் இது தான். தன் உயர்வு கருதும் செபங்கள் இறைவனை சேரவோ, மகிழ்விப்பதோ இல்லை. பிறர் நலம் அதை விட மேலாகத் தன்னிலை உணர்ந்த தாழ்ச்சியை இறைவன் ஏற்று மகிழ்கிறார். நாமும் நமது செபமும் எந்நிலை.?

காவலன்

# ஈராக் தாக்குதலைக் கண்டித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அமெரிக்கப் படைகள் ஈராக் மீது நடத்திவரும் போரைக் கண்டித்து கொழும்பில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அமெரிக்கத் தூதரகத்தை நோக்கி ஆர்ப்பாட்டப் பேரணியாகச் சென்றனர்.

அமெரிக்கத் தூதரகத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஆர்ப்பாட்டத்தினை தூதரகத்திற்கு அண்மையில் வைத்துப் பொலிஸார் கண்ணீர்ப் புகையினை வீசிக் கலைத்துள்ளனர்.

இதேவேளை முஸ்லிம்கள் தமது ஜும்மாத் தொழுகைக்குப் பின்னர் நாட்டின் பல்வேறு இடங்களிலும் பரவலாக ஆர்ப்பாட்ட நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனால் கொழும்பில் பல இடங்களில் முஸ்லிம்களின் வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன. இவ்வார்ப்பாட்டத்தின் போது அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் நாட்டுத் தேசியக் கொடிகள் எரிக்கப்பட்டதுடன் ஈராக் மக்களுக்காக பள்ளிவாசல்களில் பிரார்த்தனைகளும் நடை பெற்றன.(இ-5,29)

### சமாதானக் கேடயத்திற்கான கிரிக்கெட் போட்டி

# கொழும்பு றோயல் கல்லூரி கேடயத்தை சுவீகரித்தது

(கொழும்பு)

பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற சமாதானக் கேடயத்திற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கொழும்பு றோயல் கல்லூரி கேடயத்தை வென்றது.இறுதிப் போட்டி நேற்று கொழும்பு றோயல் கல்லூரி மைதானத்தில், யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரிக்கும் கொழும்பு றோயல் கல்லூரிக்குமிடையே நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய றோயல் கல்லூரி அணி 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 277 ஓட்டங்களை பெற்றது.

இதில் டி.சிறிவர்த்தன 108 ஓட்டங்களையும் நவீன் டயஸ் 68 ஓட்டங்களையும்,வீ.அருண் பிரகாஷ் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பரியோவான் கல்லூரி வீரர்களான ரி.சி.அன்ட்ரு 29 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் சி.அகிலன் 46 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுகருத் துடுப்பெடுத்தாடிய பரியோவான் கல்லூரி அணி 41 ஓவர்கள முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது.இதில் சி.அகிலன் ஆட்டமிழக்காமல் 52 ஓட்டங்களைப் பெற்றார்.பந்துவீச்சில் வி.ஜெயப்பிரகாஷ் 25 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும்,நவீன்டயஸ் 32 ஓட்டங்களுக்கு 5விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

சமாதானக் கேடயத்திற்கான கிறிக்கெட போட்டியில் கொழும்பு றோயல் கல்லூரி,யாழ்.மத்திய கல்லூரி,யாழ்.பரியோவான் கல்லூரி,யாழ்.பற்றிக்ஸ் கல்லூரி ஆகிய அணிகள் பங்கு பற்றியிருந்தன.

இதேவேளை இச் சுற்றுப் போட்டியில் விளையாடியவர்களுக்கான விருது வழங்கும் வைபவம் பாடசாலைக் கிரிக்கெட் சம்மேளனத்தின் செயலாளர் ரி.எஸ்.பெரேராவின் பங்களிப்புடனும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# முன்னேற்றங்கள் திருப்திகரமானது புரிந்துணர்வு உடன்படிக்கை

## அமெரிக்க பிரதிவர்த்தக அதிகாரி ஹன்ற்ஸ்மன் பாராட்டு

(கொழும்பு)

இலங்கை மீது அமெரிக்கா மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளது அதனுடன் பொருளாதார உறவுகளையும் அமெரிக்கா மிகவும் கண்டிப்புடன் நோக்குகின்றது. இவ்வாறு 'தென்னாசியாவின் நுழைவாயில் - இலங்கை' என்னும் தொனிப் பொருளில் வர்த்தக முதலீட்டு ஒப்பந்தத்தின் இணைக் கூட்டத்தில் அமெரிக்காவின் பிரதி வர்த்தக அதிகாரி ஹன்ற்ஸ்மன் தெரிவித்தார்.

கூட்டத்தில் சுமார் 30 பிரபல தனியார் நிறுவன பிரதிநிகள் சமுகமளித்திருந்தனர். இவர்களில் சிலர் இப்பொழுது இலங்கையுடன் வர்த்தக தொடர்புகளை கொண்டுள்ளனர். சிலர் தொடர்புகளை ஏற்படுத்த முடிவு செய்திருக்கிறார்கள்.

வாஷிங்டனில் வெள்ளை மாளிகை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்தப் பேச்சுக்களில் உரையாற்றிய ஹன்ற்ஸ்மன் கடந்த எட்டு மாதங்களிலும் ஒப்பந்தத்தினால் ஏற்பட்ட முன்னேற்றங்கள் திருப்திகரமானவை என பராட்டினார். தென்னாசியாவில் பெரும் பொருளாதார வளங்கள் உள்ள நாடு இலங்கை. அங்கு முதலீடு செய்வதில் மிகுந்த புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு யூலை மாதம் பிரதமர் ரணில் விக்ரமசிங்க வெள்ளை மாளிகையில் இதற்கான ஒப்பந்தத்தை கையொப்பம் இட்டிருந்தார். இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை நோக்கிய வேகமான நகர்வுகள் இடம் பெற்று வருகின்றன என்றும் குறிப்பிட்டிருந்தார்.(இ)

# பொஜமுன்னணி ஆட்சி அமைத்தால் புலிகளுடன் பேச்சு நடத்துவோம்

## மங்கள -அமுனுகம கூட்டாகத் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய அரசு கலைக்கப்பட்டாலே, அல்லது தானாக கவிழ்ந்தாலே, பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அமைக்குமானால் விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை தொடரும் என முன்னணியின் பிரமுகர்களான மங்கள சமரவீராவும், கலாநிதி சரத் அமுனுகமவும் தெரிவித்துள்ளனர்.

பொது ஜன ஐக்கிய முன்னணியின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் நேற்று நடை பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மேற் கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அவ் மாநாட்டில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

அரசும், விடுதலைப்புலிகளும் தற்போது நடத்திவரும் பேச்சுவார்த்தைக்கு பொது ஜன ஐக்கிய முன்னணி எவ்வகையிலும் முட்டுக்கட்டை போடமாட்டாது. தற்போதைய அரசு இப்பொழுது மக்களின் மத்தியில் செல்வாக்கினை இழந்து வருகிறது. இந்நிலையில் ஆட்சி மாற்ற மொன்றை மக்கள் இப்போது விரும்பத் தொடங்கியுள்ளனர். தற்போதைய ஆட்சியில் மாற்றம்ஏற்பட்டு பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியமைக்கும் போது விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சு வார்த்தையை தொடருவோம் என்றும் மங்கள சமரவீராவும், கலாநிதி சரத்அமுனுகமவும் மேலும் தெரிவித்துள்ளனர். (வ)

# இரகசிய தகவல் வழங்குவோரை புலிகள் கொலை செய்தனராம்

## அரசைச்சாடி மங்களசமரவீர அறிக்கை

(கொழும்பு)

அமுலிலுள்ள போர் நிறுத்தத்தின் மறைப்பில் புலனாய்த் துறையினருக்கு இரகசியத்தகவல்களை வழங்கி வருபவர்களை விடுதலைப் புலிகள் படுகொலை செய்து வருகின்றனராம். இதனை தடுப்பதற்கு ஐ.தே.மு அரசாங்கம் முயற்சி எடுக்காததிற்கு கட்சியின் கவலைகளை ஓர் அறிக்கை மூலம் பொ.ஐ.முவின் சிரேஷ்ட தலைவர் மங்கள சமரவீரா வெளியிட்டுள்ளார். இவ்வாறான 20 கொலைகள் இதுவரை நடந்துவிட்டன என்றும் அவர் அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரச படைகளுடனும் பொலிஸாருடனும் இணைந்து செயற்பட்ட இவர்கள் பயங்கரவாதிகள், புலிகள் பற்றிய முக்கிய தகவலைத் தந்து கொண்டிருந்தவர்களாவர். இவர்கள் கொலை செய்யப்பட்டமை நாட்டின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலை தோற்றிவித்துள்ளது. இன்றைய அரசாங்கத்தின் போர் நிறுத்தத்தை சாட்டாக கொண்டு புலிகளே இவற்றை செய்து வருகின்றனர் என்று ஸ்ரீ.ல.சு. கட்சி பொறுப்புடன் தெரிவிக்கிறது என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

### சமாதானம் வேண்டி சைக்கிள் பயணம்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் சமாதானம் வெற்றியடைய வேண்டி 15 நாட்களில் இலங்கையை சைக்கிளில் சுற்றி வரும் பயணத்தை எஸ்.இராஜரட்ணசிங்கம் என்பவர் நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளார்.கிளிநொச்சியில் ஆரம்பமான இச் சைக்கிளோட்டப் பயணம், நேற்று யாழ்ப் பாணம் அரச செயலகத்தை வந்தடைந்தது.

நேற்று பிற்பகல் மீண்டும் புறப்பட்ட இச்சைக்கிள் பயணம், வவுனியா,அனுராதபுரம், திருகோணமலை, மட்டககளப்பு, பதுளை, மாத்தளை, கண்டி, குருநாகல், களுத்துறை,காலி,அவிசாவல,நீர் கொழும்பு, கொழும்பு ஆகிய இடங்களுக்கு செல்லவுள்ளது.(இ-7)

### உள்ளூராட்சி....

கொண்டு அமெரிக்கா சென்ற பின் அங்கிருந்து நேற்று நாடுதிரும்பிய அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பத்திரிகையாளர்களுடன் கலந்துரையாடிய போதே மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக விடுதலைப் புலிகள் ஆரோக்கியமான விருப்பத்தைத் தெரிவித்திருப்பதால் யூன் மாதத்தில் தேர்தல்களை நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அரசாங்கம் தற்போது விடுதலைப் புலிகளுடன் நடத்தி வரும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அமெரிக்கா வேண்டிய உதவிகளைச் செய்வதற்கு தயாரரகவுள்ளதுடன் பேச்சு வார்த்தைக்கு ஆதரவு அளிப்பதாக உறுதி அளித்துள்ளதாகவும் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். (ம)

### மூன்றுபொலிஸாருக்கு..

சம்பந்தப்பட்ட சிறுமி நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பின்னர் பாதுகாப்பான ஒரு இடத்தில் சிறுமி பராமரிக்கப் பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக விஷேட குற்றத்தடுப்புப் பொலிஸார் இரகசிய விசாரணைகளை தீவிரமாக மேற் கொண்டு வருகின்றனர். (வ)

### டோக்கியோ..

நாடுகளின் கூட்டத்திற்கு அமெரிக்க யப்பான,நோர்வே மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகியன கூட்டுத் தலைமை தாங்கவுளளமை குறிப்பிடத் தக்கதாகும்.

டோக்கியோவில் யூன் மாதம் 9ம்,10ம் திகதிகளில் நடை பெற வுள்ள இக் கூட்டத்திற்கு முன்பு இரண்டு ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.அதிலொன்று அடுத்த மாதம் 14ம் திகதி அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஆம்றேஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.இலங்கை அரசின் சார்பில் அமைச்சர் மிலிந்த மொறகொட இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளார்.

இரண்டாவது கூட்டம் மே மாதம் 6ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது இக் கூட்டத்தில் டோக்கியோ மாநாட்டில் எடுக்கப்படவுள்ள பல விடயங்கள குறித்துத் தீர்மானங்கள் எடுக்கப் படவுள்ளன. (வ)

# நவன் காப்பகம் திறப்பு விழா

(வேலணை)

தீவக நலன் காப்பக தலைமைக் காரியாலயம் நேற்று வேலணை வங்களாவடிச் சந்தியில் திறந்து வைக்கப் பட்டது.

புங்குடுதீவு,நயினாதீவு ப.நோ.கூ. சங்க தலைவர் ப.கணேசலிங்கம் தலைமையில் நடை பெற்ற இந் நிகழ்வுக்கு,

தீவக அரசியல் துறைப் பொறுப்பாளர் அருந்தவம் பிரதம விருந்தினராகவும், யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டானர்.

இந நிகழ்வில் நினைவுச் சுடரினை தீவக அரசியல் துறைப் பொறுப்பாளர் அருந்தவம் ஏற்றி வைத்தார். தேசியக் கொடியினை யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றிவைக்க, தீவக நலன் காப்பகப் பெயர்ப்பலகையினை ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் எம்.எக்ஸ். செல்வநாயகம் திரை நீக்கம் செய்து வைத்தார். அதனைத் தொடர்ந்து தீவக நலன் காப்பக அலுவலகத்தை சி.இளம்பரிதி திறந்து வைத்தார். (இ-5,47)

### புலிகள்...

கையளிக்கப்பட்டது.

நேற்று கையளிக்கப்பட்ட விசாரணை அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

கடந்த 20ம் திகதி வியாழக்கிழமை இரவு இடம் பெற்ற சம்பவத்தில் சம்பந்தப்பட்ட சீன மீனவர்களிடம் நேரில் விசாரித்தபோது விடுதலைப் புலிகள் தான் தம்மை தாக்கினார்கள் என்று தெரிவித்துள்ளனர்.

ஆனால் விடுதலைப்புலிகள் தான் தாக்கினார்கள் என்பதற்கான சாட்சியங்கள் எதுவும் எமது விசாரணையின் போது கிடைக்கவில்லை. இதனால் எதனையும் நாம் உறுதியாக கூறமுடியாத நிலையுள்ளது.

கடந்த 20ம்திகதி இரவு மீன் பிடி இழுவைப்படகுகள் தாககப்பட்டபோதும் அப்படகுகளில் இருந்த 27பேரில் 18பேர் காணாமல் போனமையும் பின்னர் வடமராட்சி கிழக்கு கடற் பகுதியில் ஏழு சீன மீனவர்களின் சடலங்கள் கரையொதுங்கியமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. (ம)

### நிருபம் சென்.

யில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

இவர்களது விடுதலை தொடர்பாகவும், இந்தியக் கடற் படையினரின் இவ்வாறான செயற்பாடுகள் மனித உரிமை மீறல்களாக உள்ளதெனவும், இச்சந்திப்பின்போது இசாத் பதியுதீன் விரிவாக தூதுவருக்கு எடுத்துக் கூறியுள்ளார். இதே வேளை இச் சம்பவம் தொடர்பாக பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கும் இசாத் பதியுதீன் எம்.பி கடிதம் அனுப்பி வைத்துள்ளார். (இ-5)

### க.பொ.த..

இவ்வாறில்லாவிட்டால் மார்ச் மாத முடிவுக்குள் பெறுபேறுகளை வெளியிட்டிருக்க முடியுமென்று பரீட்சை ஆணையாளர் மகிந்த விஜேசிறி 20 பாடசாலைகள் இன்னும் எமக்கு கணிப்பீட்டுத் திட்டத்தை அனுப்பி வைக்கவில்லை. எவ்வாறாயினும் ஏப்பிரல் முதல் வாரத்தினுள் பெறு பேறுகளை அனுப்பி வைக்க முடியுமென அவர் மேலும் தெரிவித்தார் (இ)

MEDICAL CHECK UP
வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.
- X-RAY, ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள். சிறுநீர்ப்பாசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [C/5602]

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.03.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.